

# தென்மொழி

## எதிரிகள் காதில் தெளிவாக ஓது!

ஆண்டெலாம் ஒருசிறு கூட்டம் — இசை
அரங்கெனத் தமிழ்நாட்டில்
நடத்துங்கொண் டாட்டம்
மூண்டெரி கின்ற தீ மூட்டம் — அதில்
முற்றும் அழியும்நம்
முத்தமிழ் ஈட்டம்!

தமிழிலே பாடுதல் மட்டம் — என்று
தாளங்கள் தட்டி
அடிக்கிறார் கொட்டம்
திமிராகச் செயல்படும் திட்டம் — கெடின்
திண்டாடி நிற்குமே
'அவர்களி'ன் வட்டம்!

இன்றமிழ் பாடுதல் தீட்டு — தெய்வ
இசையெனப் படுவது
தெலுங்கிசைப் பாட்டு
என்றவன் சொல்வதைக் கேட்டு — பல்
இளிக்கின்ற தமிழனின்
செவியினைத் தீட்டு!

'துக்கடா' தமிழென்று சொல்வார் — சில
சொற்களைப் பேசியும்
தமிழினைக் கொல்வார்
திக்கெலாம் பெயர்பெற்று வெல்வார் — நாம்
திறமாக நோக்கினால்
எங்கடா செல்வார்?

கனிவான தமிழையல் லாது — மக்கள்
கருத்தொடு கேட்டிட
வேறெது தோது
இனியுங்கள் சீட்டுசெல் லாது — என
எதிரிகள் காதில்
தெளிவாக ஓது!

— இறை

## உள்ளே...


தமிழினம் விழித்தெழுமே!

எழுச்சி கொள்க
தமிழ்த் தேசியமே!

அறுபருவத் திருக்கூத்து
— கூதிர் காலம் —

போலி ஒருமைப்பாடு!

இம்முறை யாருக்கு
ஒப்போலை போடுவது?

மொழியுணர்வால்
மீண்டெழுந்த ஒரிசா!

கோயிலமைப்பும்
தோன்றியங்களும்!

மொழிப்போர் ஈகியர்க்கு
நினைவுமண்டபம் எழுப்புக!



சுவடி - 30
ஓலை - 2
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 கும்பம் (பிப்பிரவரி - 1998)

# தமிழ்மொழி வாழ்க!

எடுப்பு

தமிழ் மொழி வாழ்க!
தமிழினம் வாழ்க!
தமிழ்நாடு வாழ்கவே வாழ்க!

தொடுப்பு

அமிழ்தினும் இனிய அருந்தமிழ் வாழ்க!
அதனினம் நிலமென்றும் வாழ்க! வாழ்க! (தமிழ்)

முடிப்பு

தொன்மைத் தமிழ்மொழி! முன்மைத் தமிழ்மொழி!
தூய்மையும் தாய்மையும் வாய்ந்தமொழி!
மென்மைத் தமிழ்மொழி! மேன்மைத் தமிழ்மொழி!
மேவும் இலக்கியம் நிறைந்த மொழி! (தமிழ்)


இளமைத் தமிழ்மொழி! இனிமைத் தமிழ்மொழி!
எளிமையும் இயன்மையும் தோய்ந்தமொழி!
வளமைத் தமிழ்மொழி! வன்மைத் தமிழ்மொழி!
வாழ்வியல் அறவியல் ஆய்ந்தமொழி! (தமிழ்)

அறிவுத் தமிழ்மொழி! அழகுத் தமிழ்மொழி!
ஆன்றமெய் யறிவியல் சான்றமொழி!
செறிவுத் தமிழ்மொழி! செம்மைத் தமிழ்மொழி!
செப்பமும் நுட்பமும் சேர்ந்தமொழி! (தமிழ்)

திண்மைத் தமிழ்மொழி! உண்மைத் தமிழ்மொழி!
செழுமையும் முழுமையும் ஏய்ந்தமொழி!
ஒண்மைத் தமிழ்மொழி! உயர்மைத் தமிழ்மொழி!
ஓர்மையும் சீர்மையும் அமைந்தமொழி! (தமிழ்)

பாண்மைத் தமிழ்மொழி! பரவைத் தமிழ்மொழி!
பழமையும் புதுமையும் இணைந்தமொழி!
ஆண்மைத் தமிழ்மொழி! பெண்மைத் தமிழ்மொழி!
அன்றையும் என்றையும் நின்றமொழி! (தமிழ்)

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
(26.5.1981 கோவைச்சிறை)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

**நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்**



# தென்மொழி

மொழி—இனம்—நாடு

**நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

**ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்**

T. 5851

சுவடி.30) தி.பி. உ0உகூ - சுறவம் (சனவரி-'98) (ஓலை.1

# அணிகளும் பிணிகளும்

தேர்தல் என்றால் அதில் அரசியல் கட்சிகளின் கூட்டணி என்பதும் ஒரு பகுதியாகிவிட்டது. அனைத்திந்திய அளவிலோ மாநில அளவிலோ எத்துணைப் பெரிய கட்சியாயினும் கூட்டணி இல்லாமல் தேர்தலைச் சந்திக்கும் நிலை இன்றில்லை.

இந்தியாவில் இனி ஒற்றைக்கட்சி – அனைத்திந்தியக் கட்சி ஆட்சி புரிய இயலாது எனும் நிலையில் இந்தியக் கூட்டமைப்புக்கு விழுகின்ற அடியாகவே இந்தக் கூட்டணிகள் – கூட்டணி ஆட்சிகள் அமைகின்றன. இந்தியத்தையும் ஆரியப் பார்ப்பனியத்தையும் காப்பாற்ற மாநிலக் கட்சிகளே எப்படியுந் தங்களை மாற்றிக்கொண்டு கூட்டணி அமைக்கின்றன.

இனி, கட்சியரசியல் முறைப்படி, அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகளை எடுத்து விளக்கியும் திட்டங்களை முன்வைத்தும் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி யடைந்து ஆட்சியமைப்பது அல்லது முறையான எதிர்க்கட்சியாகச் செயல்படுவது என்பதற்கு மாறாக, ஏதேனுமொரு சாய்காலினால் பெயரளவில் கட்சியாகிக் கூட்டணிகள் ஒன்றில் ஒட்டிக்கொண்டு

சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றத்துக்குள் நுழைந்துவிடலாம், சூழலையொட்டிப் பதவி நலங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்னும் நிலை இன்று பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது.

இந்தியத் தேசியப் பேராயத்திலிருந்து பெயரளவில் விடுபட்டாலும் அம் மயக்கம் முற்றிலுந் தெளியாத தமிழ் மாநிலப் பேராயமும், மதவெறிக் கட்சியான பாரதீய சனதா கட்சியைத் 'தீண்டத் தகாத கட்சியன்று' என்றும் சொல்லிவைத்து எதிர்கால நோக்கோடு ஒருவாறு பச்சைக் கொடி காட்டியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் உடன்பாடு கொண்டு வெற்றிக் கனியை நாடி நிற்கின்றன. வழக்கம்போல் பொதுவுடைமைக் கட்சிகளே ஒட்டுத் திண்ணையில் நிறைவடையும்போது, முசுலிம் கட்சிகளுக்கு அந்நிலை தவிர்க்க முடியாததே!

அழிவுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த அ.இ.அ.தி.மு.க. வுக்கு ஓட்டைப் படகானாலும் பா.ச.க. கிடைத்திருப்பதும், மதவெறிக் கட்சியான பா.ச.க. தமிழ்நாட்டில் காலூன்றுவதற்கு உளுத்துப் போன ஊன்றுகோலானாலும் அ.இ.அ.தி.மு.க. கிடைத்திருப்பதும் இழப்பதற்குப் பெரிய அளவில் ஏதுமற்ற அவற்றைப் பொறுத்தவரை மிகப் பெரிய பாக்கியமே!

''நாங்கள் ஈழப் போராளிகளில் யாரையும் ஆதரிக்க மாட்டோம்'' என்று கட்சிக்காரர்களின் தலையிலடித்துத் தம் சறுக்கலுக்கு உறுதி கூறிய வை. கோபாலசாமியின் கட்சியோ, இனப் பகையும் கோடரிக் காம்புமான சுப்பிரமணியச்சாமி, வாழப்பாடி இராமமூர்த்தி கட்சிகளோ இக்கூட்டணியில் சேர்வதில் வியப்பில்லை.

இனவுணர்வு, நாட்டுரிமைக் கொள்கைகளை உயர்த்திப் பிடித்து, ஊழலின் ஊற்றுக் கண் என்றும் சாய்க்கடை என்றும் கொள்ளைக் கும்பல் என்றும் செயலலிதா கட்சியையும், மதவெறிக் கட்சி என்று பா.ச.க.வையும் மற்றவர்களைவிட அதிகமாகவே வசைபாடிய பாட்டாளி மக்கள் கட்சி, கடந்த காலத்தில் தான் மேற்கொண்ட நிலைகளுக்கு முற்றிலும் நேர்மாறாக, கொசுக்கடிக்குத் தப்பிப் புலி முழைஞ்சில் புகுந்ததுபோல் அ.தி.மு.க. – பா.ச.க. கூட்டணியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு என்ன பெயர் சொல்வது? மறுக்க முடியாதபடி மலையளவு ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியிருப்பதோடு மதவெறிக் கும்பலுக்கு நடைபாவாடை விரித்து வழிவகுத்துக் கொடுக்கும் கட்சியின் துணையொடு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதும் அக்கட்சி காப்பாற்றப்படுவதாகவே வைத்துக்கொண்டாலும் அதனால் யாருக்கு என்ன பயன்?

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை மிகப்பெரிய மதக் கலவரத்துக்கு அடிகோலிக்கொண்டிருப்பதும், ஆட்சியைக் கைப் பற்றுவதற்கு எத்தகைய அறங்கடையையும் செய்யத் துணிந்து மடிதற்று நிற்பதுமான பாரதீய சனதா கட்சி அ.இ.அ.தி.மு.க. வுடன் கைகோத்து நிற்பதன்மூலம் தமிழ்நாட்டில் யாண்டும் தன் நச்சு வேர்களைப் பரப்புவதற்கு வாய்ப்பைப் பெற்றுள்ளது.

கூட்டணி வைத்துக்கொள்வது, அதன்வழித் தாம் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிப்பது என்பதைக் கடந்து பாரதீய சனதாக் கட்சி தான் ஏற்றுக் கொண்ட ஆரியப் பார்ப்பனியக் கொள்கையில் உறுதியாய் இருப்பதும், எக்கரணியங்கொண்டும் அக் கருத்துகளை மக்களிடம் அடாவடியாய்த் திணிக்கிற போக்கில் கைநெகிழாதிருப்பதும் ஆய்ந்து பார்க்க வேண்டியவை.

ஆனால், இல்லாத திராவிடத்தோடு தமிழ்த் தேச உணர்வைப் போட்டுக் குழப்பி அரசியற் சாய்கால் பெற்றிருக்குங் கட்சிகள் எல்லாமே தாம் மேற்கொண்டதாகக் கூறிய கொள்கைகளுக்கு நேர் எதிராக மாறி, இத் தமிழ்ப்பேரின மக்களின் முதுகில் குத்திக் கொண்டிருக்கும் செயல்கள் தமிழக வரலாற்றில் மிகவும் இழிவான கட்டத்தையே சந்திக்க வைக்கும் என்பதை எண்ணி நாம் கவலுறாமல் இருக்க இயலவில்லை.

பாரதீய சனதா வெற்றிபெற்றுவிடுமே என்றோ, அதன் ஆரியப் பார்ப்பனியத்தை மறுப்பதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் தோற்க நேரிட்டு விடுமோ என்றோ நாம் வருந்தவில்லை.

மாறாக, தமிழ்த் தேசிய உணர்வு மெல்ல வளர்ந்து எழுச்சி கொள்ளும் இச்சூழலில், பாரதீய சனதாவின் வழியும், அதன் துணை யணிகளான இந்து அமைப்புகளின் வழியும் ஆரியப் பார்ப்பனியம் தன் நஞ்சைப் பரப்பித் தமிழியத்தையும் அதற்கான உணர்வுகளையும் துலைத்துவிடுகிற கொடிய சூழலை எண்ணியே நாம் வருந்த வேண்டியுள்ளது.

அன்றியும், தம் வலி, தம் குமுகச் சூழல் இவற்றைப் பற்றியெல்லாம் எண்ணாமல் புலியோடு உறவாடச் சூடுபோட்டுக் கொள்கிற பூனையின் செயலாய்ப் போய்த் தாம் அழிவது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் பின்னடைவை ஏற்படுத்துவோர்தம் கண்மூடித்தனமான அரசியற் போக்கே நம்மைக் கவலைகொள்ளச் செய்கிறது.

— இறை

# அறுபருவத் திருக்கூத்து

[இயற்கை எழிலோவியமான அறுபருவத் திருக்கூத்து என்னும் இவ்வருந்தமிழ் இலக்கியம் கடந்த நாற்பது யாண்டுகட்கு முன்னரே பாவலரேறு ஐயா அவர்களால் புனையப்பெற்றது. கார்காலம் பற்றிய இதன் முதற்பகுதியும் கூதிர் காலம் பற்றிய இரண்டாம் பகுதியின் ஒருகூறும் மாத்திரம், தென்மொழியின் தொடக்கக் கால இதழ்களில் (இயல்:1, இசை: 11,12,13) பாடற்சுருக்கத்துடன் வெளிவந்தன. பிறபகுதிகள் கையெழுத்து வடிவிலும் பாடற்பொருட்சுருக்கம் எழுதப் படாமலும் உள்ளன. நீண்ட இடைவெளியை எண்ணி ஈண்டு அம் முதற் பருவமுதலே வெளியிடுகிறோம். தொடர்ந்த அடுத்தடுத்த பகுதிகள் புலவர் இறைக்குருவனார் எழுதும் பாடற் பொருட் சுருக்கத்துடன் தென்மொழியில் இடம்பெறும். —ஆசிரியர்.]

## முன்னுரை:

நம் நாட்டினர், இயற்கை காட்டும் கோலத்தைக் கூர்ந்து நோக்கிக் காலத்தை அறுவகைகளாகப் பிரித்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில் என்பன. இவற்றை வடமொழியாளர் வருசம், சரத்து, ஏமந்தம், சிசிரம், வசந்தம், கிரீசுமம், என்பர். மேனாட்டார் கார், கூதிரை ஒன்றுபடுத்தி Winter என்றும், முன்பனி பின்பனியை ஒன்றாக்கி Spring என்றும், இளவேனில் முதிர்வேனிலை ஒன்றாக்கி Summer என்றும் பாகுபாடு படுத்துவர். அவர்க்குக் காலத் தொடக்கமும் முடிவும் வேறு.

பண்பியல்களையும், இயற்கை நலன்களையும் துல்லியமாக அறியவே பண்டைத் தமிழர் விரும்பினர் என்பதை அவர் வகுத்த திணை, துறை பாகுபாட்டியல்களையும் பருவ இயல்களையும் ஊன்றியுணர்வார் தெளிவர்.

நமக்குள்ள ஆறு காலங்களிலும் நிகழும் மாந்தர்தம் சிறப்பு நிகழ்ச்சிகளையும், விலங்கு, பறவை இவற்றின் நடப்பு முறைகளையும், வானிலும், மலையிலும், காவிலும், கழனிகளிலும் ஏற்படும் இயற்கை ஓவிய மாறுபாடுகளையும் பண்டைப் புலவர் கூர்ந்து நோக்கி யுணர்ந்தவர் என்பதை நம் கழக நூல்களின் இடையிடையே கூறப்பட்டுள்ள இயற்கைக் காட்சிப் பாடல்கள் தெள்ளிதின் விளக்கும்.

கற்றறிந்தார் ஏத்துங் கலியில் பெரும்பாலும் பாலையிலும், சிறுபான்மை வேற்றிடங்களிலும், குறுந்தொகையில் சிற்சில பாடல்

**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

களின் சிற்சில வரிகளிலும், பத்துப்பாட்டில் சிறப்பாக நெடுநல் வாடையிலும், பொதுவாக முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றிலும் பிறவற்றிலும், நாலைந்திணைகளிலும், சிலப்பதிகாரத்தில் சிறப்பாகக் கானல்வரியிலும், ஊர்காண் காதை யிலும் மற்றும் ஓரோவோரிடங்களிலும், அகநானூற்றில் சிற்சில பாடல்களிலும் பருவ நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன எனினும் அவை முழுமை எய்தினவாகா. இன்னின்ன பருவத்தே இன்னின்ன பூக்கள், காய்கள், கனிகள், தோன்றும் என்றும், இன்னின்ன நிகழ்ச்சிகள் நடக்கும் என்றும் ஒருங்குபடுத்திக் கூறத் தமிழில் ஒரு நூல்தானும் இல்லை. இருந்திருப்பினும் அதுபற்றிக் குறிப்புக் கிடைக்கவில்லை. குறிப்புக் கிடைப்பினும் நூல் இல்லாதது தமிழ் இலக்கியக் குறைபாடே.

வடமொழியில் இக்குறைபாட்டை அறிந்து களைந்தவர் பெரும்புலவர் காளிதாசர் என்பர். அவர் **இருதுசம்காரம்** என்ற பருவ நூலை எழுதியதாகக் கூறுவர். நூல் முழுதும் கிடைப்பினும், அதைப் பாடியவர் பற்றிக் கருத்துவேற்றுமைகள் உள்ளன. எது எவ்வாறாயினும் வடமொழி **இருதுசம்காரம்** போன்ற பருவ நூல் தமிழில் தேவையானதை உணர்ந்தேன்.

இதுபற்றி எளிதாக எண்ணி எழுதத் தொடங்கிய பின்னரே, இதை எழுதுவதில் உள்ள தொல்லைகளை உணரலானேன். தளம் போட்ட வீட்டில், இயங்கிகளின் பேரொலியிலும் மக்கள் ஆரவாரங் கட்கிடையிலும் அமர்ந்துகொண்டு, அமைதியும் இயற்கை அழகும் சூழ்ந்த மலைபற்றியும், காடு பற்றியும், அவற்றின் கோலங்கள் பற்றியும் எழுதப்புகுந்தது என் தொல்லைக்கு முதற் காரணம்.

பண்டைப் புலவர் காடுகளிலும், மேடுகளிலும், வயல் வரப் புகளிலும், சுற்றியலைந்து கண்டவாறு போலல்லாது, அவை பற்றி நேரில்கண்டு அறியாமல், இயற்கை விழைவும் வேட்கையும் மட்டுமே காரணமாகி, அதனைப் பற்றிக்கொண்டு கற்பனைக் குன்றேறி நிற்கவும், எண்ணப் பொய்கையில் மூழ்கவும் கருத்துச் சோலைகளில் உலாவவும் முற்பட்டது, அடுத்த தொல்லை.

இவற்றின் சூழ்வில் இருந்தது ஒருவகையில் நன்மையாகவும் பட்டது. வெயிலில் அலைந்து வாடிய ஒருவன் நிழலருமை கண்டு மகிழ்வது போல், இப் புன்மை ஆரவாரப் புரையொலிகட் கிடையில், உண்மையான இயற்கை வேட்கை எனக்கு மிக்கிருந்து கற்பனையும் பெருக்கெடுத்தோடியது. அக் கற்பனை அழகில் மூழ்கி நான்கண்ட நிழலின்பம் கூறுதற்கெளியதன்று.

மேலும் இதை எழுதப் புகுமுன் எனக்கிருந்த சூழ்நிலைகள் பற்றி, இதனை நூலாக அச்சிடுங்கால் விரித்து எழுதுகின்றேன்.

இந்நூலைப் படிக்குமுன் உள்ளத்தை இயற்கைக்கு அடிமையாக்கிக் கொள்ளுமாறு படிப்பாரை வேண்டுகிறேன். அவ்வாறு இயற்கையின்பாற் படுத்தப் பட்ட உள்ளத்தேதான் அழகும் அதனைக் கண்டுணரும் ஆற்றலும் மிகும் என்பதும், அவ்வாறு இயற்கை உணர்வு மிக மிகத்தான் மாந்தப் பண்பாடு மிளிரும் என்பதும், அவ்வாறு மிளிர மிளிரத்தான் மாநிலம் உய்யும் என்பதும் இதனை முழுதுங் கற்று முடிப்பார் தெளிவாக உணர்வர். இத்தகைய இயற்கை நல நூல்கள் குறைந்து, ஐம்புலன் உணர்வை மட்டுமே தட்டி யெழுப்புகின்ற புன்மை நூல்கள் இடைக்காலத்தே எழுந்தமையாலேயே தமிழ்நாட்டார்தம்பால் பண்பொழுங்கும், ஒற்றுமை உணர்வும், கெட்டொழிந்து போயின. இத்தகைய நல்லுணர்வுகளை, ஒருவர், உள்ளத்தே வித்திடச் செய்வதே இந்த **'அறுபருவத் திருக்கூத்தின்'** முழுக் குறிக்கோள் ஆகும்.

தமிழ் ஆசிரியரும், மாணவரும் நூலை ஊன்றிச் சுவைக்க!

**நூல்முறை:**

இந்நூலுள் வரும் பாக்களெல்லாம் அகவற்பாவால் நடப்பன. ஒவ்வொரு பருவத்தையும் நூறு நூறு அடிகளால் விளக்குதலினால், நூலின் மொத்த அடிகள் அறுநூறாம் என்றறிக. அடிகள் இடையிடைத் தங்கி எழுந்து போவனவாய் அமையாது, மலையிடைச் சுரந்து மடுவிடைப் படுத்து, நிலம்பரந்தோடும் நெடுநீராறாய்ப் பெருக்கெடுத்து, இறுதியில் அலைகடல் சேரும் ஆற்றின் போக்காய், முடிவில் மூலக் கருத்தொடு கலந்து மகிழ்வை விளைவிக்கின்றன.

நூலின் தொடக்கம் குளிர்மையும், இனிமையும், பசுமையும், நீர்மையும் கலந்து உலகத் துயிர்த் தோற்றங்கட்கெல்லாம் உட்கருவாய் அமைந்ததும், சான்றோரால் நூலின் முற்பகுதியில் வைத்துப் போற்றப் பெற்றதுமான மழைக் காலமாகும். ஒவ்வொரு காலத்திற்கும் தலைப்புப் பெயர்கள் தரப்பெற்றுள்ளன. இப்பெயர்கள் நூலின் கருப்பொருளை விளக்குவனவாகவும், அதன் சிறப்பைக் கூறுவன வாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இனி நூலுள் நுழைவாம்.

# 1 கார்

**காலம்: மடங்கல் – கன்னி (ஆவணி - புரட்டாசி)**

**பாட்டின் பெயர்: உயிர்க்குயி ரூட்டும்**
**ஒழுகுவா னமிழ்து!**

**பாட்டுச் சுருக்கம்:**

அரிய நீண்ட வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கின்றது. முன் மாலை தொடங்கிய மழை, இரவு முழுவதும் விடாமற் பெய்து

கொண்டிருக்கின்றது. பெரும் படைகள் போன்று கரிய முகில்கள் வானைச் சூழ்ந்து, ஒன்றோடொன்று முட்டி மோதலால் கடுமையான குரலுடன் இடி உருட்டுகின்றது. நலிந்தவர் முகங்கண்டு இரங்கி, அவர்க்கு வரையாது கொடுக்கும் அருள்கனிந்த கொடைச் செல்வனின் பெரும் பொருள்கள் போல் தொடர்ந்து பெய்யும் இராமழைக்கு உலகம் நடுங்குகின்றது. பெருமழை காரணமாக நீண்ட கரைகளை உடைய ஆறுகளில் விரைந்து ஓடிய நீர், ஆற்றோரங்களில் உள்ள அடி அகன்று பருத்த பெருமரங்களை அடி பெயர்த்து வீழ்த்தி உருட்டிக்கொண்டு போகின்றது. கரையுடைத்து ஓடுகின்ற மழை வெள்ளம் அருகில் பரந்துகிடக்கும் வயல்களில் பாய்கின்றது. பெய்கின்ற மழைக்கு அஞ்சிய குரங்குக் கூட்டம் இங்குமங்கும் தாவி அலைந்துகொண்டிருக்கின்றது. தொங்குகின்ற கைகளையும், தூண்போன்ற கால்களையும் உடைய யானைக்கூட்டம், அடிக்கடி முழங்குகின்ற இடியோசைகளைக்கேட்டு அஞ்சி அவற்றொடு பொருத முற்படுகின்றன. மீறிய சினத்தால் அவ்வியானைகளின் கன்னங்களில் வெறிநீர் பொங்கிக் கொண்டிருக்கின்றது.

ஒருபுறம் மரங்களிற் கட்டிய கூடுகளெல்லாம், வலிய வாடைக்காற்றால் பிய்த்தெறியப்பட்டனவால்,குளிர்மிகுந்து நடுங்கி உடலொடுங்கிய குருவியினம் மரக்கிளைகளில் உள்ள புழைகளில் போய் அடங்குகின்றன. விலங்குகளெல்லாம் இரை தேடுவது முற்றும் இயலாமையினால் கடுமையான பசியையும் அடக்கிக்கொள்கின்றன. காட்டின் ஒரு பக்கலில் இடி விழுந்ததால் அங்குள்ள மரங்களெல்லாம் தீப்பற்றி எரிகின்றன. அக் கொடுந்தீயில் பெரிய மலைப்பாம்புகள் தீய்ந்து போகின்றன. ஆற்றுக்கருகில் மணலுள் மறைந்துகிடந்த தவளைகள் பொங்கியெழும் வெள்ளத்தால் மகிழ்ந்து வாயரற்றிப் பாடுகின்றன;

வானின்று வழியும் மழைநீர்க்கு மகிழ்ந்து, கானமயில்கள், தந்தந் தோகைகளை விரிக்கின்றன: அங்குள்ள புற்களின் நுனிகளிலும், புதர்களிலும் மேய்ந்துகொண்டிருந்த மின்மினிக் கூட்டங்கள், அழகிய சிறுசிறு விளக்குகளை ஏந்தித் திரிவனபோல் காட்சியளிக்கின்றன. காளாம்பிகள் சிறுசிறு குடைகளை விரித்வாறு ஒருகாலில் நின்றுகொண்டிருப்பன, அன்னக்குஞ்சுகள் போல் தோற்றம் அளிக்கின்றன; தம்தம் குறுகிய தலைகளை வெளியே நீட்டுவதும், உறுமுகின்ற இடியொலி கேட்டு அஞ்சி உள்ளே இழுத்துக்கொள்வது மாகக் குறுமுயற்கூட்டங்கள் புழைகளில் பதுங்கியிருக்கின்றன. மின்னலும் இடியும் மாறி மாறி நிகழ்வதால் அவற்றிற்கஞ்சிய மான்

கூட்டங்கள், தாம் போய்த் தங்குமிடங்களிலிருந்து வேறு வேறு இடங்களுக்குத் தாவியவண்ணமே யிருக்கின்றன.

களிற்று யானைகள்போல் உள்ள கரிய முகில்கள், குன்றுகளின் உச்சிகளில் வந்து உலவிக்கொண்டிருக்கின்றன. முழங்குகின்ற அருவி நீர் சரிவான பாறைகளிலிருந்து பச்சைப் புல்வெளிகளில் குதித்து விளையாடுதல்போல் காட்சியளிக்கின்றது. ஆங்குக் குதித்த இடத்தில் ஏற்பட்ட நீரின் சுழற்சியில் பல குற்றுயிர்களும் சுழலுகின்றன. பெய்து கொண்டிருக்கின்ற மழைத் துளிகளை உண்டு, மகிழ்ச்சியுடன் வானம்பாடி வானில் வட்டமிடுகின்றது. இவ்வகை ஆரவாரங்கட் கிடையில் இரவு கழிந்துகொண்டே போகின்றது.

செம்மண் நிலத்தின்கண் விழுந்து கிடக்கின்ற பன்னிற மலர்கட் கிடையில் பவள நிறமுடைய தம்பலப் பூச்சிகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. ஆக்களெல்லாம் ஈரம்படிந்த புற்களை அருந்தாமலிருக்கின்றன; கன்றுகளெல்லாம் ஆக்களில் மெல்லிய மடிகளின் மருங்குகளில் ஒடுங்கித் தூங்குகின்றன.

வீட்டுப் பறவைகள் தம்தம் குஞ்சுகளுடன் உடல்கூனி நடுங்கி நிற்கின்றன; ஒருபக்கலில் மென்மையான உடலை உடைய புறாக்கள் தம்முட் புணர்ந்து மகிழ்கின்றன. வீசுகின்ற வாடைக்காற்றால் வெருகு என்னும் பூனை உடல் ஒடுங்க அமர்ந்திருக்கின்றது. தூய்மையான மழைநீர் வீட்டுக் கூரைகளினின்று இழிந்து கொண்டே யிருக்கின்றது. தாழங்குடைகள் தரைக்கு வந்து சேர்ந்தன. ஓலையாற் பின்னிய விசிறிகள் பரண்மீது போய் அவ்விடத்தை அடைத்துக் கொண்டன.

ஊரைச்சுற்றியுள்ள புதர்களில், காந்தள் மலர்ந்திருக்கின்றது. காக்கணம் பூத்திருக்கின்றது. உயர்ந்தோங்கி நின்ற கொன்றை மரங்களில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் நிறைந்திருக்கின்றன. அவை ஈரம் படிந்ததால் தரைநோக்கித் தாழ்ந்திருக்கின்றன. வேங்கை மலர்ந்திருக்கின்றது. ஓங்குயர்ந்திருக்கின்ற காயா மரங்களில் பூக்கள் நிறைந்து தூங்குகின்றன. கடம்ப மலரும், கூதளமும் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றன. பின்னிப் பிணைந்து, பற்றி ஏறியவாறு முல்லை பூத்து விளங்குகின்றது. பீரல் பூத்துப் புதர்களைச் சூழ்ந்து படர்ந்திருக்கின்றது. ஈரமலர்களையுடைய பிரசம் எங்கணும் விளங்குகின்றது. பிடவமும், தளவமும் நிறைந்திருக்கின்றன. பித்திகம் சிவந்து நிற்கின்றது. ஈங்கைக் கொடி அங்கும் இங்கும் அலைந்து புரள்கின்றது.

இவ்வகையான எழில் பொருந்திய சூழல்களில் ஓடிக் கொண்டிருக்கின்ற மழைநீர், நிலங்களில் உள்ள வெடிப்புத்

துளைகளில் இறங்கிக் கொண்டிருக்கின்றது. பெய்துகொண்டே யிருக்கின்ற வானம் வெண்மையான கருநிறத்தோடு, கதிரவனையும் வெளிக்குக் காட்டாமல் மறைக்கின்றது. அங்குள்ள முகில்களில் மழைநீர் நிறைந்துள்ளதால் அவை மிகவும் தாழ்ந்து உலவுகின்றன.

கருமை மண்டிய முகில்போன்ற குழலையும், பிறைநிலாப் போல் குற்றமற்ற நெற்றியையும், அணிகள் தொங்கும் செவிகளையும், குனிந்த வில் போன்ற புருவங்களையும், கலை பொங்கி வழியும் கண்களையும், தென்றல் போன்ற குளிர்ந்த மெல்லிய மூச்சுக்காற்றை இயக்கும் துளைகளையுடைய மூக்கையும், தேன் விளைந்து கசிகின்ற இரண்டு இதழ்களையும், முத்துகளின் வரிசை போன்ற பற்களையும், அழகிய முழுமணிபோல் அமைந்த தாடையையும், மூங்கில் போன்ற தோளையும், அழகிய காந்தள் மலர்போல் சிவந்த கைகளையும், பிழையில்லாத ஓவியக்கலை நுட்பங்கள் அடங்கிப் பொங்கிய மார்பகங்களையும், மெல்லிய ஈர்க்குப் போன்ற இடையையும், நலிவில்லாத இசையோட்டத்தைப் பண்தவறாமல் பயின்றவாறு நடக்கின்ற அழகிய நாடகத்தின் உறுப்பாகிய கால்களையும், அக்கால்களிலிருந்தவாறு ஒலியெழுப்பும் சிலம்புகளைப் பொருந்திய செம்மைசான்ற காலடிகளையும், கூரிய உகிர்களையும் உடைய பருவம் அணைந்த பெண்டிர், ஓயாமற் பெய்கின்ற பெருமழைக்கு அஞ்சுகின்றனர். அவர் கழுத்தில் மனைமகளுக்கு அணியாகிய மணவணி ஒன்றே கிடக்கின்றது. அதுவன்றி மற்ற அணிகள் பூணுவதை ஒதுக்கினர்.

தேர்ந்தெடுத்த செம்பட்டு உடைகளைத் தலையிலிருந்து கால் வரையிற் போர்த்திருக்கின்றனர். வெளியே போவதாலும், வருவதாலும் அவர்தம் உடைகள் உடலோடு ஒட்டுதலால், அவர்தம் உடல் அழகு வெளிப்படுகின்றது. அவர் குழல்களைத் தளர்வாகக் கட்டியிருக்கின்றனர். அவற்றில் ஓரிரண்டு தாழை மலர்களையும், மகிழ மலர்களையும் சூடியிருக்கின்றனர். அவர்தம் கண்கள் மைதீட்டப்பெறாமல் இயற்கையழகோடு விளங்குகின்றன. அகிற் கலவையைப் பூசிப் பழகிய அவர் மார்பகங்கள் அக் குழம்புப் பூச்சை மறந்திருக்கின்றன. அவர்தம் காலடிகள் பொன்னிறமுடைய பவளக்குறிஞ்சி (மருதோன்றி) இலைகளின் குளிர்ந்த சாற்றைப் பூசுவதை வெறுத்திருக்கின்றன.

வரிவரியாக ஒன்று சேர்ந்து பொன்கருப்பு வண்ணத்தில் உள்ள மென் மயிர்கள் முளைத்த முன்கைகளையுடைய அப் பெண்டிர் அழகிய வளையல்களை வீழ்த்தினர். உடல் ஈரம் போவதற்கு எரியின் பக்கலில் அமர்ந்து உடலை இளஞ்சூடு ஏற்றிக் களிக்கின்றனர்.

நனைந்திருக்கின்ற சுவர்களையுடைய வீடுதோறும் பலவகை நன்வேர்களையிட்டுக் காய்ச்சிப் புகையெழுப்புகின்றனர். நல்ல சுவை பொருந்திய உணவைச் சூடு ஆறாமலே, தணல் எழுப்பும் தீயின் அருகில் அமர்ந்து உண்கின்றனர். ஈண்டு அவர் கொழுவிய தயிரை விரும்புவதிலர்; குளிர்ந்த நீரையும் அருந்துவதிலர்; அவர் உணவில் சேர்கின்ற நாட்பட்டுச் சுவைபெருகிய தேனையும் ஒதுக்கி விடுகின்றனர். ஆவின்பாலை மிகுதியும் அருந்துகின்றனர்.

உணஃவு முடிந்தபின்னை, திறந்துள்ள மாடங்களைத் தொங்கு திரை கட்டி வாடைக் காற்றைத் தடுக்கின்றனர் வெளியே சென்ற ஆடவர் திரும்பாவுழி, ஊடல் எண்ணம் மிகுந்து உள்ளத்தில் எழுகின்ற நல்ல காதல் உணர்வை அடக்குகின்றனர்.

அகிற்றூளும் புகைத்தலால் சூடு மண்டிய தனித்த படுக்கை அறையில் கணவனன்றித் தனியாகப் புகுந்து, நீண்டு உயர்ந்த கதவின் உட்புறத் தாழை முடுக்குகின்றனர். குடைந்து அழகு செய்யப்பெற்ற, கால்களையுடைய கட்டில்மீது ஏறிப் படுக்கின்றனர். கொழுநர் வீடு வராததால் அவர் கண்கள் வேலெனக் கூர்மையான பார்வை கக்கி நிற்கின்றன. அவர் வரும் வழியை மேவி அப்பெண்டிர்தம் விழிகள் நிற்கின்றன.

இங்ஙனம் தனித்து வருந்தும் இளம்பெண்டிர் தம்மை, ஏறு போன்ற காளையர் நள்ளிரவில் கதவைத்திறக்க இரந்து வேண்டி உள்ளே புகுகின்றனர். அவர் காலந்தாழ்ந்து வருகின்றமைக்குக் கூறுகின்ற காரணங்களை, அணிகள் தொங்கும் செவியராகிய அப் பெண்டிர் ஏற்க மறுத்து ஊடுகின்றனர்.

விடாது பெய்கின்ற பெருமழையில், நடுவழியில் தாம் அகப்பட்டுக்கொண்டதையும் அதிலிருந்து மீண்டு வரவும், வந்து மனைவியோடு பொருந்தவும் விருப்பம் இருந்தும், கையில் குடை யில்லாமலிருந்ததால் அவ்வாறு வரமுடியாமற் போனதையும், அம் மழைக்காக ஒதுங்கிய ஒரு வீட்டில் தாம்கண்ட ஒரு பெண்ணையும், அப் பெண்ணின் மையுண்ட கண்களுக்குத் தாம் இரையாகப் பட்டதையும் முறையாக அப் பெண்டிர்பால் அவ்வாடவர் உரைத்துத் தம்மை மன்னித் தேற்குமாறு இரந்து நிற்கின்றனர். வராமையால் சினந்தும், வராமைக்குக் கூறிய காரணங்களாற் கனன்றும் அப்பெண்டிர் மேலும் ஊடுகின்றனர்.

அவ்வூடல் நேரத்தில் வல்லிடி ஒன்று முழங்குகின்றது. அவ்விடி யோசையைக் கேட்டுப், பெண்மான்போல் அஞ்சியோடி, ஊடலை மறந்து அவர் கொழுநரைத் தழுவிக்கொள்கின்றனர். தளர்வுள்ள

பிணைப்பை வலுப்படுத்தும் திறன் உள்ள கார்காலம் வந்ததாக! கரிய முகில்கள் மேய்கின்ற கார்காலம் வந்ததாக!! இப்பாரின்கண் உயிர்க்கும் பல்கோடி உயிர்களும் தம்முள் மகிழவும், ஒன்றோ டொன்று கலக்கவும், எழில்போர்த்தி நிற்கவும், தேன்போல் இனிமையான நல்ல நீரையே மழையாகச் சிந்துகின்ற இக் கார்காலம் வந்துற்றதாக!

## நூல்

கருங்கார்ப் பெரும்படை கடுங்குரல் உருட்ட,
நறுங்கொடைச் செல்வன் நலிந்தவர்க் கீத்த,
பெரும்பொரு ளன்ன பெயல்தொட ரிரவின்
அரும்பெரும் வாடைக் கிந்நிலம் நடுங்க,
வேர்பெயர்த் தகலடி வீழ்த்தி யுருட்டி

நீர்விரைந் தோட்டும் நெடுங்கரை யாறு,
வயல்தொறும் பாய, வான்மழைக் கஞ்சி
அயலயல் தாவி அலையக் குரக்கினம்,
தொங்குவாய்த் துழவித் தூண்கால் மிதித்தே
பொங்குநீர்க் களிற்றினம் வானிடி பொருத,

கூடுசீழ்த் தெறிந்த வாடைக் கொடுங்கி,
கோடுபுழை யடங்கிக் குரீஇனம் வாடப்,
பன்னாள் மாவினம் படுபசி யொடுங்க,
மின்னே றுண்ட மரந்தீ மேய,
கனலகப் பட்ட கடுஞ்சுணந் தீய,

மணலுறைந் திருந்த நுணல்வா யரற்ற,
வான மஞ்சின் வழிநீர்க் குவந்து
கான மஞ்ஞை பீலி விரிப்ப,
புன்னுனி தோறும் புதல்தொறும் மேய்ந்த
மின்மினிக் குழாஅம் மணிவிளக் கெடுப்ப,

சிறுகுடை விரித்த ஒருகா லாம்பி,
குறுங்கால் அன்னக் குஞ்செனா நிற்ப,
உறுமும் பேரிடி ஓசைக் கஞ்சிக்
குறுமுயற் கூட்டம் குறுந்தலை யிழுப்ப,
வல்வாய் முழக்கம் வழிவழி மின்னப்

புல்வாய் நிரையம் புலம்புலந் தாவ,
பகடெனக் கொண்மூப் படைநெடுங் குன்றின்
முகடுவந் துலவ, முழவுநீ ரருவி

பாறை நழுவிப் பைம்புலங் குதிப்ப,
சூறைப் புனலுட் பல்லுயிர் சுழல,

ஊனுயிர் களிப்ப உருதுளி மாந்தி
வானம் பாடி வான்வளைந் திசைக்க,
செம்புலப் பரப்பிற் பன்மலர் சிறக்கத்
தம்பலப் பூச்சிகள் தலைதலை மேய,
ஆவினம் ஈர்ம்புல் அருந்திட மறுப்ப,

மேவிய கன்றின்ம் மென்மடி துஞ்ச,
குஞ்சொடு பெடையுடற் கூனி நடுங்க,
பஞ்சுடற் புறவினம் புணர்ச்சியிற் பரவ,
வீசுவல் வாடையில் வெருகுட லொடுங்க,
மாசறப் பெயனீர் மனைமுது கிழிய,

தாழை மலர்க்குடை தரைவந் திறங்க,
ஓலை விசிறிகள் உயர்பரண் ஏற,
காந்தண் மலர, காக்கணம் பூப்ப,
ஏந்துபூங் கொன்றை இணர்தரை தாழ,
வேங்கை அலர, விரியத் தாழை,

ஓங்குயர் காயா, ஒண்பூத் தூங்க,
கடம்பம் மணக்கக், கூதளம் நகைப்ப,
இடந்தொறும் முல்லை இவர்ந்துயர் விளங்க,
பீரல் பூத்துப் பெரும்புதர் மறைப்ப,
ஈர்ம்மலர் பிரச மெங்கணும் ஒளிர

ஆடுவண் டவிழ்க்க அரும்பவிழ் பிடவம்
நீடுமணம் பரப்ப, நெடுங்கொடித் தளவம்
பூம்புதல் மேய, பித்திகஞ் சிவப்ப,
ஈங்கை நறுங்கொடி யாங்கணும் இவர,
புலந்தொறும் புலந்தொறும் புனல்வழிந் தோடி,

நிலந்துளை புக்க நெடும் பெயல் வானம்
வெண்கருப் பேறி விரிகதிர் மறைப்ப,
தண்மழைத் தாரை தாழ்முகில் ஒழுக,
மழைக்குழல், மலர்முகம், மருவிற் பிறைநுதல்,
குழைசெவி, புருவக் கூன்வில், கலைக்கண்,

தென்றல் மூக்குத் தேன்விளை ஈரிதழ்,
முத்தப் பல்வரி, முழுமணித் தாடை,
கழைதோள், காந்தட் கடிமலர்ச் செங்கை,
பிழையா ஓவியப் பெருமார் பீர்க்கிடை,
நலியா இசைபயில் நாடக மணிக்கால்,

ஒலியெழு சிலம்பச் சீரடி கூருகிர்,
புனையிளம் பாவையர் பொழிநீர் அஞ்சி
மனையணி தவிர மற்றணி துறக்கத்,
தேர்ந்தசெம் பட்டுடை தலைமுதற் புரள,
ஈர்ந்துகில் உடல்வனப் பெடுத்துக் காட்ட,

தாழை, மகிழந் தாழ்குழல் அணிந்தே,
மாழைக் கருங்கண் மைவணம் துறப்பக்,
கொம்மைச் சூட்டகம் குழையகில் மறப்ப,
செம்மைப் பூதைச் சீரடி வெறுப்ப,
அரிமயிர் முன்கை அணிவளை வீழ்த்த

எரிமருங் கமர்ந்துடல் இளஞ்சூ டேற்ற,
பனிச்சுவர் மனைதொறும் பல்புகை யூட்ட,
தனிச்சுவைச் சூட்டுண் தணல்மருங் குண்ண,
கொழுந்தயிர் விரும்பார், குளிர்புனற் குடியார்,
பழந்தேன் ஒதுக்கிப் பால்மிக வருந்தி

வாடை மாடம் ஆடை போர்த்தே
ஊடல் உள்ளத் துயர்வுணர் வடக்கி,
அயிரகிற் புகைத்த அறைதனி புகுந்து,
உயர்நெடுங் கதவத் துட்டாழ் முடுக்கி,
கால்குடைத் தெடுத்த கட்டில் ஏறி,

வேற்கண் பெண்டிர் விழிவழி மேவ,
ஏறுடற் கொண்கண் இரந்துட் புக்க,
கூறுமொழி ஏலாக் குழைசெவி புலப்ப,
அடைமழை நடுவழி அகப்பட் டதுஉம்,
குடையொடும் போகாக் காரண முரைத்தும்,

ஓரில் ஒதுங்கி உண்கண் ஒருத்தி
நேரில் பட்ட நெடுங்கதை மொழிந்தும்,
காளை யிரப்பக், கடுஞ்சின மெழுமவ்,
வேளை யதிர்குரல் வல்லிடி முழக்க,
அஞ்சி மடவரல் அவன்றோள் தழுவக்,

கொஞ்சுமான் பிணையொடு கொழுநன் மகிழக்,
கார்வந் தன்றே! கார்வந் தன்றே!
பார்நின் றுயிர்க்கும் பல்லுயிர் பரவவும்
கார்வந் தார்ப்பவும் சிந்துதேன் மாமழைக்
கார்வந் தன்றே! கார்வந் தன்றே!

தொடரும்...

# தில்லியில் நடந்த ஈழத்தமிழர் ஆதரவு அனைத்துலக மாநாடு

ஈழமக்களைப் பற்றியும் அவர்களுக்குத் துணைசெய்து வழி நடத்தும் இயக்கங்களைப் பற்றியும் பேசக்கூட தமிழகத் தலைவர்கள் தயங்கும் தட்டிக்கழிக்கும் இந்நேரத்தில் இந்தியத் தலைநகர் தில்லியில் முன்னாள் நடுவண் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சியார்சு பெர்னாண்டசு அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு பன்னாட்டு மாநாட்டைக் கூட்டியது என்பது மிகவும் ஆறுதலான ஒரு செய்தியாகும். 14.12.97 அன்று அம்மாநாடு கூடும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் வழக்கமாகச் நிலையைப்போல் மாநாடு நடைபெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அரசு தடைசெய்தது. இதையொட்டி, திட்டமிட்ட இடத்தில் நடைபெற இயலாது, சியார்சு பெர்னாண்டசு இல்லத்தின் பின்புறப் பரந்தவெளித் திடலில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

மாநாட்டில் தில்லி, ஆந்திரா, மராட்டியம், பீகார், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், புதுவை ஆகிய மாநிலங்களிலிருந்தும் பல்வேறு மாந்த உரிமை இயக்கங்களின் உயர் பொறுப்பில் உள்ளவர்கள் கலந்துகொண்டனர். தமிழ்நாட்டிலிருந்தும் புதுவையிலிருந்தும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு அமைப்பாளர் பழ. நெடுமாறன் ஏற்பாட்டின்படி தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்து பெ. மணியரசன், தமிழ் தமிழர் இயக்கத்தினின்று தியாகு, த. நா. மா. இலெ. கட்சியிலிருந்து கி.வே. பொன்னையன் கார்முகில், பொ.வே. இராமனுசம், உ.த.மு.கவிலிருந்து மா.செ. தமிழ்மணி, மா. பூங்குன்றன், மற்றும் புதுவை ந.மு. தமிழ்மணி இரா. சனார்த்தனம், ஈழவேந்தன், வாலாசா வல்லவன், நற்றேவன் முதலான இருநூறுக்கும் மேற்பட்ட தமிழகப் பேராளர்களும் தில்லிவாழ் தமிழர்களும் பிறமொழியினரும் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் சியார்சு பெர்ணாண்டசு தலைமையில் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, இலங்கை மருத்துவர் சதானந்தன் முன்னாள் வெளியுறவுச் செயலர் ஏ.பி. வெங்கடேசுவரன் ஆத்திரேலியா மாந்த உரிமைக் கழக மால்கம் கிரேசி, பிரான்சு கில்லிசு

பிக்விசு இந்திய அமைதிப் படையின் தலைவராக இருந்த அசோக்கு மேத்தா, இரா. சனார்த்தனம் ஆகியோர் பேசினர். தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் நெடுமாறன் நன்றி கூறினார்.



இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இதுபோன்ற மாநாடுகளை நடத்தி, ஈழத்தமிழர் சிக்கலை உலக அளவில் எடுத்துச் செல்வோம் என்று மாநாட்டுத் தலைவர் சியார்சு பெர்னாண்டசு அறிவித்தார்.

பிரான்சு சட்ட இயல் அறிஞர் கில்லிசு பேசுகையில் உலகில் அதிக அளவில் இனப்படுகொலை நடக்கும் நாடு இலங்கையாகும். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மாந்த உரிமைகள் எங்கு மீறப்பட்டாலும் அதற்காகப் பிரான்சு நாட்டு மக்கள் குரல் கொடுப்பார்கள் என்று பேசினார்.

இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலர் ஏ.பி. வெங்கடேசுவரன் அமைதிப் படை தமிழீழத்தில் ஏவப்பட்டபோது இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி விளக்கினார். இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை யார் வந்தாலும் தடுக்க முடியாது. அவர்களின் நேர்மையான இலக்கு வெற்ற பெற்றே தீரும் என்று பேசினார்.

இலங்கை மருத்துவர் சதானந்தன் பேசுகையில் "புலிகள் போர்க் கருவிகளைக் கீழேப் போட்டால்தான் பேச்சு நடக்கும் என்று சந்திரிகா கூறுகிறார். புலிகள் கருவிகளைக் கீழே போட்டுவிட்டால் எதற்குப் பேச்சு நடக்கவேண்டும்? அடுத்து கருவிகளைக் கீழே போட்ட இயக்கங்கள் பல உள்ளனவே அவற்றுடனெல்லாம் பேச்சு நடத்த வேண்டியதுதானே. அவை கெஞ்சினாலும் அவற்றைச் சிங்கள அரசு காதில் போட்டுக் கொள்ளவில்லையே. புலிகளையும் ஈழத் தமிழர்களையும் யாரும் பிரித்துப் பார்க்கமுடியாது" என்றார்.

திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி, "விடுதலைப் போராட்டத்திற்கும் வன்முறைச் செயலிற்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். புலிகள் ஈழத்தில் தங்கள் மக்களின் அடிப்படை உரிமைக்காகப் போராடுகின்றனர். இந்திய அரசியல் சட்டப்படி என்று எடுத்துக் கொண்டாலும் கண்முன் சிங்களவன் கொலை, கற்பழிப்பு

செய்யும்போது என்ன செய்யவேண்டுமோ அதைத்தான் புலிகள் செய்கின்றனர். இவ்வாறான விடுதலைப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவும் மதிப்புமளிக்க வேண்டும்'' என்று பேசினார்.




இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சோசப் பரராசசிங்கம் பேசும்போது ''நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையைப் பற்றி உரத்தகுரல் கொடுத்து வருகிறேன். ஆளுங் கட்சியினர் இதைத் தேச இரண்டகச்செயல் என்று கூறி என்மீது நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர். இது தேச இரண்டகச் செயல் என்று கூறினால் நான் அதைத் தொடர்ந்து செய்வேன்'' என்று முழக்கமிட்டார்.



இம்மாநாட்டில் கலந்துகொள்ளவந்த ஆத்திரேலியப் பேராளர் யோகன் மைல்சை விண்ணூர்தி நிலையத்தில் தடுத்துத் திருப்பியனுப்பியது இந்திய அரசு. 1995இல் உலகத் தமிழ் மாநாட்டில் பங்குபெறவந்த வெளிநாட்டு தமிழறிஞர்களைத் திருப்பியனுப்பி நரசிம்மராவ் அரசு மாந்த உரிமையைப் பறித்ததுபோலவே இன்று ஒருங்கிணைப்பு முன்னணி அரசு செய்துள்ளது. நரசிம்மராவ்க்கும் இந்திரசித்குப்தாவிற்கும் மாந்த உரிமை அடிப்படையில் வேறுபாடே இல்லை என இம்மாநாட்டுக்கு நன்றி கூறிய பழ. நெடுமாறன் குற்றஞ்சாட்டிப் பேசினார்.

மாநாட்டிற்கிடையில் உ.பி. கலைக் குழுவினர் ஈழத்தமிழர்களை நடுவாகக் கொண்டு இந்தியர், அமெரிக்கர், மொசாத்து எவ்வாறு அரசியல் நடத்திக் கொடுமைப்படுத்துகின்றனர் என்பதை விளக்கும் கலை நிகழ்ச்சியொன்றை நடத்திக் காட்டினர். உணர்ச்சி மேலிட்ட இந்த நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.

மாநாட்டில் முகாமையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# மருத்துவத் தமிழ்ப்புலம் வெற்றியீட்டுக!

மக்களின் இயற்கையான அறிவுவளர்ச்சிக்கும் அது தொடர்பான முன்னேற்ற முயற்சிகளுக்கும் அடிப்படையானது அனைத்துத் துறைகளையும் தாய்மொழிவழிப் பயிலும் வாய்ப்பே. தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டு வந்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாதபடி எழுப்பப்படும் பல்வேறு தடைகளுள் தமிழில் போதுமான அளவுக்கு நூல்களை இல்லை என்பதும் ஒன்று.

தமிழ்வழிக் கல்விக்கான பலதுறை நூல்களை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வரினும், சிறப்பாகப் பொறியியல், மருத்துவம் முதலான தொழில்சார் கல்வித் துறைகளை தமிழ்வழிப் பயிலும் நிலை ஏற்பட்டால்தான் தமிழ்வழிக்கல்வி முழுமையாக வெற்றிபெறவியலும்.

பொறியியலைத் தமிழ்வழிப் பயிற்றுதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஏதோ ஒரு வகையில் இவ்வாண்டு நழுவினாலும், நூல்கள் இல்லை என்று குறைசொல்ல முடியாதபடி பொறியியல் தமிழ் நூல்கள் உருவாக்கப்பட்டு அணியமாக உள்ளன. பொறியியல் வல்லுநர் முனைவர் அ. இளங்கோவன் அவர்கள் இதனை உறுதிப் படுத்தியுள்ளார். *(தென்மொழி . சுவடி : 29, ஓலை : 11)*

இனி, மருத்துவத்தில் துறைதோறும் தமிழ்நூல்களை உருவாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டரசின் சார்பில் மருத்துவத் தமிழ்ப்புலம் என்னும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதற்கான தொடக்கவிழா தி.பி. 2028 துலை 26 அறிவன் (12.11.97) அன்று சென்னை மருத்துவக் கல்லூரி – ஆய்வுநிலையம் மற்றும் அரசு மருத்துவமனை வளாகத்தில் கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகனார் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. தமிழ்வளர்ச்சி – பண்பாட்டுத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் பெயர்ப் பலகையைத் திறந்துவைத்துள்ளார்.

இம் மருத்துவத் தமிழ்ப் புலத்தின் பொறுப்பாளராக, இயல்பான தமிழ்ப்பற்றும் மருத்துவத் துறையில் நுண்ணறிவும் செயற்றிறமும் வாய்ந்தவரும், நெஞ்சக நோய் இயல் வல்லுநருமான மருத்துவர் தொமினிக்கு சுவாமிநாதன் அமர்த்தப் பெற்றுள்ளார். மயக்கவியல் நூல் உருவாக்கப் பங்குபற்றுநர் தெரிவுக் கூட்டத்தை நடத்திப் பணி தொடங்கப்பட்டுள்ளது.

போதுமான அளவுக்கு அறிவியல் – கலைச்சொல் அகராதிகள் இன்னும் வெளிவராத நிலையில் மருத்துவத் துறையில் தமிழ்நூல்கள் உருவாக்கம் என்பது கலைச் சொல்லாக்கத்தையும் உள்ளடக்கிய கடின முயற்சியே. இவ்வரிய பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவத் தமிழ்ப்புலம் இலக்கை நிறைவுசெய்து வெற்றியீட்டுக!

— **செம்பி**

# மொழி உணர்வால் மீண்டெழுந்த ஒரிசா!

இந்தியா வெவ்வேறு தேசிய இனங்கள் வாழும் ஒரு துணைக் கண்டம். ஒவ்வொன்றும் தனித்த மொழி, வரலாறு, பண்பாடு, மரபு, நிலப்பரப்பு முதலியன கொண்டவையாகும். தம்முடைய தனித் தன்மைகளை வெளிப்படுத்தவும், வளம்பெற்று வளரவும் அவற்றின் மொழிகள் அடிப்படையாகின்றன. மொழியின் வீழ்ச்சி இனத்தின் வீழ்ச்சியாகிறது. இனத்தின் மீட்சியும் உயர்வும் அதன் மொழியின் உரிமை மீட்சிக்கும் வளர்ச்சிக்கும் தக அமைகின்றன. இக்கால வரலாற்றின் தொடக்கத்தில் ஒரிய மொழி பேசும் ஒரிசா மக்கள் சிதைந்து கிடந்தமையும், மொழி உணர்வைப் பற்றி நின்று ஒன்றுபட்டு முயன்று தனி மாநிலத்தை உருவாக்கி உரிமையைக் காக்க முற்பட்டமையும் அனைவருக்கும் நல்ல பாடமாகும்.

**பெயர்:**

உட்கலம், கலிங்கம் என்பவை ஒரிய மொழி மக்கள் வாழும் ஒரிசா மாநிலத்தின் வேறு பெயர்கள். அதன் வடக்கில் வங்கமும், பிகாரும், மேற்கில் மத்தியப் பிரதேசமும், தெற்கில் ஆந்திரமும், கிழக்கில் வங்காள விரிகுடாவும் இருக்கின்றன.

கி.பி. 638-இல் இந்தியாவிற்கு வந்த சீன நாட்டவனான உவான் சுவாங்கு இந்நிலப் பகுதியை 'உடா' எனக் குறிப்பிட்டுள்ளான். ஒட்டா (odda) எனும் பெருவாரியான ஓர் இனக் குழுவினரின் பெயரையொட்டி, முதலில் ஒடியா என அழைக்கப்பட்ட மொழி, காலப்போக்கில் ஒரியா என மருவிற்று என்பர்.

ஒருசொல்லில் உள்ள ய, ச, ஜ ஆகிய எழுத்துக்கள், பல இடங்களில் ஒன்றிற்கொன்று மாறிவருகின்றன: யமுனை--ஜமுனா, யாதவ்--ஜாதவ், தேயம்--தேசம், நேயம்--நேசம், அய்யன்--அச்சன், நெயவு--நெசவு, வாயில்--வாசல், அரசன்--அரயன்--ராயன்--ராசன்--ராஜன், ராய்--ராஜ் என்பன சில எடுத்துக்காட்டுகள். இவ்வாறே ஒரியா நாடு, ஒரிசா என அழைக்கப்படுகிறது.

**பழைய வரலாறு:**

இதற்குத் தொன்மையான வரலாறு உண்டு. ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பார்ப்பனியமும் பவுத்தமும் சமணமும் கலந்த ஒரு நாகரிகத்தை, ஒரிசா நாட்டின் திராவிட மக்கள் பின்பற்றினர் கள் என ஒரிய இலக்கிய மேதையாகிய சுரேந்திர மொகந்தி

கு. வெ. கி. ஆசான்

எழுதுகிறார். (THE ILLUSTRATED WEEKLY OF INDIA – ANNUAL. 1973)

**கலிங்கப்போர்:**

மவுரியப் பேரரசன் சந்திரகுபுத்தனின் பேரனும், பிந்துசாரனின் மகனுமான புகழ்பெற்ற அசோகன் கி.மு. 261-இல் கலிங்கத்தின் மீது படையெடுத்து வென்றான். தமது மண்ணின் உரிமையைக் காப்பதற்காக ஓரியர்கள் கடுமையாகப் போரிட்டதால் இலக்கக் கணக்கில் வீரர் மாண்டனர்; விலங்குகள் மடிந்தன. இந்த அவலக் காட்சியைக் கண்ட அசோகன் போர்க்கள வெற்றியைத் துறந்து, அறநெறியைப் பரப்பி மக்கள் மனத்தை வெல்ல முடிவு எடுத்து, புத்தரின் அன்பு நெறியைத் தழுவினான். உலக வரலாற்றில் இது பெருந்திருப்பமாயிற்று.

**காரவேலன்:**

தமிழகத்தின் மீதான மவுரியப் படையெடுப்பைப் பற்றி, இரு பாடல்களில் மாமூலனாரும், மற்றும் இரண்டு பாடல்களில் கழகப் புலவர்கள் பிறரும் குறிக்கின்றனர். ஆனால், தமிழகம் கைப்பற்றப் படவில்லை. அசோகனின் கல்வெட்டுக்களில் சேர, சோழ, பாண்டியரின் நிலம் தனியரசுகள் கொண்டதாகவே குறிக்கப் பெற்றுள்ளது. மவுரியப் படையெடுப்புத் தோற்றதற்குக் காரணம், தமிழ் வேந்தர்கள் தங்களுக்குள் வலிமையான ஒரு பாதுகாப்புக் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டதேயாகும்.

இந்தக் கூட்டணியைப் பற்றி ஓரிசாவின் புகழ்வாய்ந்த பேரரசன் காரவேலனின் காதிகும்பா (யானைக் குகை) கல்வெட்டுக் கூறுகிறது. அவனது ஆட்சியில், முதல் 13 ஆண்டுச் செயல்வெற்றி களை (கட்டாக்கு மற்றும் புவனேசுவர நகரங்களுக்கு அருகில்) உதயகிரியில் உள்ள இக் கல்வெட்டு வெளிப்படுத்துகிறது. பிராகிருத மொழியில் பிராமி எழுத்தில் கி.மு. 160-இல் இது பொறிக்கப் பெற்றது. தான் ஆட்சிக்கு வந்த 11-ஆவது ஆண்டில், தமிழ் மன்னர் களின் 113 ஆண்டுக் காலக் கூட்டணியைக் குலைத்துவிட்டதாக அதில் காரவேலன் பெருமைப்பட்டுக்கொள்கிறான். இஃது தலையாய ஒரு வரலாற்றுச் செய்தியை உறுதிப்படுத்துகிறது. காரவேலனின் 11ஆவது ஆட்சியாண்டாகிய கி.மு. 162 உடன் 113-ஐக் கூட்டினால் கி.மு. 275 கிடைக்கப்பெறும். இக் காலத்தில் மகத நாட்டைச் சந்திரகுபுத்த மவுரியனின் மகனும் அசோகனின் தந்தையுமான பிந்துசாரன் (கி.மு. 298–273) ஆண்டான். கழக நூல் களில் குறிக்கப்பெறும் மவுரியப் படையெடுப்பை நடத்தியவன் இவனே என வரலாற்றாசிரியர் சத்தியநாதர் எழுதுகிறார். தமிழ்

தொண்டைமான் தலைமையில் கலிங்கத்தின் மீது போர்தொடுத்தது. இந்தப் போரின் வெற்றியைச் செயங்கொண்டார் தமது கலிங்கத்துப் பரணியில் பாடுகிறார்.

முதலாம் நரசிம்மன் *(1238-1264)* கங்கக் குடிமரபின் மற்றொரு புகழ்வாய்ந்த மன்னன். கலை நுணுக்கம் வாய்ந்த, காமச்சுவை கூடிய, கருங்கோயிலாகிய 'கொனாரக்கு' என்பதை இவன் உருவாக்கினான். கொனையில் (ஓரத்தில்) உள்ள அருகன் (சூரியன்) என்பதே அதன் பொருள். ஆம், அஃது ஒரு தமிழ்ச் சொல்! புவனேசுவரத்தில் உள்ள முத்தேசுவரர் கோயிலும், பூரியில் உள்ள சகந்நாதர் கோயிலும் கங்க மன்னர்காலத்திய பெயர்பெற்ற கலைச் சின்னங்கள்.

### கதிரவன் மரபு:

கீழைக் கங்கரின் சரிவிற்குப் பின்பு கபிலேந்திரன் கதிரவன் மரபை (சூரிய வமிசத்தை) *1435*-இல் தோற்றுவித்தான். இதற்குக் கசபதி மரபு என்றும் பெயர். இவனும், இவனுக்குப் பின்பு வந்த புருடோத்தமன் *(1470–97)*, பிரதாபருத்திரன் *(1497–1540)* ஆகியோரும் ஒரிசாவின் தனியரசைக் காப்பாற்றியதோடு, சில சமயங்களில் பிற பகுதிகளையும் வென்றனர்.

### வீழ்ச்சி:

*16*-ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரிசாவின் அரசியல் சரிவு தொடங்கிற்று. பிரதாபருத்திரன் குருவாக ஏற்றுக்கொண்ட சைதன்யர் *(1485–1534)*, கிருட்டிண பத்தியின் அடிப்படையில் மாலிய (வைணவ) மதத்தைப் பரப்பியிருந்தார். அதன் தாக்கத்தால் போராட்டக் குணத்தை ஆட்சியாளர் இழந்துவிட்டமை சரிவிற்கு முதன்மையான காரணமெனக் கூறுகிறார்கள்.

பிரதாபருத்திரனின் அமைச்சன் கோவிந்தன் தோற்றுவித்த போய் (**Bhoi**) வம்சத்தாரும், அதையடுத்து முகுந்த அரிச்சந்தனன் என்பவனும் *28* ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

வங்கத்தை ஆண்டுவந்த ஆபுகானிய சுல்தான்களின் ஆட்சிக்கு *1568*-இல் ஒரிசா ஆட்பட்டது. அகுபரின் தளபதி மான்சிங்கு *1592*-இல் அதை மொகலாயப் பேரரசில் சேர்த்தான். வங்காளத்துடன் சேர்ந்திருந்த ஒரிசாவைத் தனிமாநிலம் ஆக்கியவன், அவுரங்கசீபு.

மொகலாயப் பேரரசு வீழ்ந்த பொழுது, நாகபுரியிலிருந்து விதர்ப்ப நாட்டை ஆண்டுவந்த மராத்திய போன்சுலே அரசன், ஒரிசாவை *1751*-இல் தனது ஆட்சிக்கு உட்படுத்தினான். மராத்தியரைத் தோற்கடித்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் குழுமத்தின் மேலாளுமை *1803*-இல் ஒரிசாவின் மீது சுமத்தப்பட்டது.

— (தொடரும்)

# இட ஒதுக்கீடும் பொருளியல் நலன்களும்

— குமரிமைந்தன்

இங்கே வந்திருக்கும் பல்வேறு தாழ்த்தப்பட்டோர் (தலித்து) இயக்கத்தினரின் அணுகல்களால் தாழ்த்தப்பட்டோரின் அவலநிலையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. ஏனென்றால், உங்கள் எல்லைகள் மிகக் குறுகியவை. உங்கள் குறிக்கோள் உங்களுக்குப் பதவி உயர்வு, உங்கள் பிள்ளைகளுக்கு இ.ஆ.ப. (ஐ.ஏ.எசு.), இ.கா.ப. (ஐ.பி.எசு.) போன்ற உயர்பதவிகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைத் தேடித்தரும் ஒதுக்கீடு வேண்டும்; இந்தச் சாதி மோதல்களை அதற்குப் பயன்படுத்திக் கொள்வீர்கள். அதனால் நாட்டுப் புறத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் கல்வி வாய்ப்புப் பறிபோவதைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை.

அரசு கடந்த இருபது முப்பதாண்டுகளாகத் தொடக்கப்பள்ளி எதையும் தொடங்கவில்லை. இருக்கின்ற பள்ளிகள் எவற்றையும் பாதுகாப்பதுமில்லை. பொறியாளர் என்ற வகையில் நான் பார்வையிட்ட பள்ளிகள் சிலவற்றில் பிள்ளைகளை உடனே கட்டடத்தை விட்டகலுமாறு அறிவுரை கூறியிருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழுந்து குழந்தைகளை விழுங்கும் நிலையில் அவை இருந்தன. பள்ளிகளுக்கு ஆசிரியர்களை அமர்த்துவதில்லை. அப்படியே அமர்த்தி னாலும் அதில் கிடைக்கிற கைக் கூலியை நோக்கித்தான் ஆட்சியாளர் கள் அதைச் செய்கின்றனர். இவ்வாறு கிடைக்கிற கைக்கூலியை விடத் தனியார் பள்ளியினரிடமிருந்து கூடுதல் பணம் கிடைக்குமென்றால் தொடக்கக் கல்விப் பொறுப்பையே அரசு கைகழுவிவிடத் தயங்காது.

தனியார் பள்ளிகளின் நிலை என்ன? பெற்றோர்களை நேர்முகம் கண்டே பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். அதாவது பெற்றோர்கள் படித்திருந்தால்தான், அதுவும் பட்டம் பெற்றிருந்தால்தான் பிள்ளைகள் படிக்க முடியும் என்ற நிலை. பழைய வரண முறை புதிய வடிவில் நுழைந்திருக்கிறது. இதை எதிர்த்து உங்களில் யாராவது குரல் கொடுத்திருக்கிறீர்களா? இல்லையே! அப்படி இருக்கும் போது தாழ்த்தப் பட்டோருக்காக நீங்கள் பாடுபவதாக எப்படி உரிமை கொண்டாட முடியும்?

ஒதுக்கீடு சாதி ஒழிப்புக்கான முழுமையான கருவியன்று என்பதை நீங்களே ஒத்துக்கொள்கிறீர்கள். அப்படியான முழுமையான கருவி என்ன என்று நீங்கள் தேடிப்பார்த்ததுண்டா? அதே வேளையில் ஒதுக்கீடு சாதி அடயாளத்தை நிலைநிறுத்துகிறதென்று கருதிச் சாதி ஒழிப்புக்காக ஒதுக்கீட்டு வாய்ப்பை விட்டுக்கொடுக்க முன்வருவோருக்கென்று ஏதாவது அமைப்பு உள்ளதா?

சென்ற ஆண்டு குடந்தையைச் சேர்ந்த 'தமிழர் உறவின் முறை' என்ற அமைப்பினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் அறிக்கையைப் பெற்றேன். இட ஒதுக்கீட்டைத் தங்களின் குறிக்கோள்களில் ஒன்றாக அதில் குறிப்பிட்டிருந்தார்கள். "புதிதாகத் தமிழர் என்ற அடையாளத்துடன் ஓர் அமைப்பைத் தொடங்கும் தாங்கள், சாதி அடையாளத்தை நினைவு கூரும் ஒதுக்கீட்டைக் கைவிட்டுப் பொருளியல் மேம்பாட்டில் கவனம் செலுத்தினால் என்ன?" என்று கேட்டேன். அவர்களோ "தமிழர்கள் மேன்மையுற ஒதுக்கீடு இன்றியமையாதது; எனவே அந்த உரிமையைக் கைவிட முடியாது" என்றார்கள். நான் அவர்களுக்கு மறுமொழி எழுதிய போது ஒரு பள்ளி மாற்றுதல் சான்றிதழ் படியை இணைத்துச் சாதி பற்றிய பகுதியில் எத்தனைப் பிரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டினேன். "கடந்த 75 ஆண்டுக் காலமாக ஒதுக்கீடு நடைமுறையிலிருக்கிறது; அதன் பயனாகக் குமுகத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டிருந்தால் அம்மாற்றத்துக்கு இணையாக ஒதுக்கீட்டு முறையிலும் மாற்றம் வேண்டும்; அவ்வாறு மாற்றம் ஏதும் நிகழவில்லையாயின் இந்த ஒதுக்கீட்டினால் பயனேதும் விளையவில்லை என்று பொருள்; அவ்வாறு பயனற்றுப் போன ஒதுக்கீட்டைத் தொடர்வது தேவையில்லை" என்று எழுதினேன். "ஒதுக்கீட்டினால் பயனடைந்தவர்கள் அல்லது அதைப் பயன்படுத்தாதவர்கள் சிலர் சாதி ஒழிப்புக்காகத் தங்கள் ஒதுக்கீட்டு உரிமையை விட்டுக் கொடக்க முன்வருவர்; அத்தகையோருக் குரியதாகத் தங்கள் அமைப்பை அமையுங்கள்" என்று வேண்டினேன். அவர்களிடமிருந்து விடையேதும் இல்லை!

இடஒதுக்கீட்டைச் சற்று நுணுகிப் பார்த்தால் அது ஒட்டுண்ணி வாழ்க்கையை நோக்கியது மட்டுமன்று, மக்களை ஒடுக்கிச் சுரண்டும் அரசுப் பணியை நோக்கியது என்பது தெளிவாகும். அதுவும் மாநில அரசுப் பணி, நடுவணரசுப் பணிகளில் சம்பளம், சலுகைகளில் வேறுபாடேயன்றி மக்களின் தேசிய நலன்களை நசுக்குவதில்

வேறுபாடில்லை. மாநில அரசுக் கென்று ஒரு தனி இருப்பு உள்ளதாகத் தோன்றுவது தவறும் மாயையே. பல்லாயிரம் கோடிச் செலவில் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றங்களும் அமைச்சரவையும் நடுவணரசின் கையாளான ஆளுநரின் கடைக்கண் பார்வையிருந்தால்தான் உயிர்வாழ முடியும். அத்துடன் இச்சட்டமன்றங்களால் நிறைவேற்றப்படும் சட்டவரைவுகள் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றிச் சட்டமாக முடியாது. மாவட்ட ஆட்சி, மாவட்டக் காவல்துறைப் பதவிகள் வரை நடுவணரசின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளன. மாநில அரசுப் பணியிலிருந்து மாவட்ட ஆட்சியராக உயர்வு பெற்றோரைக் கூட இ.ஆ.ப. பட்டியலில் சேர்த்து நடுவணரசு தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. எனவே இந்த ஆட்சியமைப்பில் பணிபுரியும் கடைநிலை ஊழியர் வரை மறைமுகமாக நடுவணரசின் நலன்களை நிகரளிப்போரே.

மாநிலத் தன்னாட்சி என்ற மாநிலக் கட்சிகளின் முழக்கம் தேட்டையில் கூடுதல் பங்குக்காகவேயன்றி வேறில்லை. இந்நிலையில் ஒதுக்கீட்டையும் தேசியத்தையும் இணைத்துப் பேசுவோரை, அதாவது தமிழ்த் தேசியத்தின் ஒரு குரலே ஒதுக்கீட்டுரிமை என்போரை என்னவென்று சொல்வது?

அரசு வேலைவாய்ப்புகள் கருகி வருகின்றன; எனவே ஒதுக்கீட்டுப் போராட்டங்கள் சாதி மோதல்களுக்குக் காரணமாக அமைகின்றன என்று கூறினால் தனியார் நிறுவனங்களில் ஒதுக்கீடு வேண்டுமென்று கூறுகிறார்கள். இன்று தனியார் நிறுவனங்கள் அனைத்தும் பன்னாட்டு நிறுவனங்களின் ஒட்டுறுப்புகளாய் மாறிப் போன நிலையில் அவற்றில் கிடைக்கும் பணி எவ்வாறு தேசிய நலன்களுக்கு இசைந்ததாயிருக்கும். இன்று வளர்ந்து வரும் பன்னாட்டு நிறுவனங்களின் உயர்தொழில் நுட்பத் தனியார் நிறுவனங்களில் அனைத்துமே பொறிகளால் நடைபெறு கின்றன. கிடைக்கும் வேலை வாய்ப்புகள் மிகக் குறைவான எண்ணிக்கை யில் உள்ள மீக்குயர் தொழில்நுட்பப் பதவிகளே. இந்த விரல்விட்டு எண்ணக்கூடிய பதவிகளுக்காக நம் நாட்டு மக்களைக் கட்சி கட்டி நிற்கச் சொல்கிறார்களா? அதுவும் நாட்டிலுள்ள தேசியங்களை அடக்கி ஒடுக்கும் அரசுப் பணிகளிலும் நம் நாட்டு வளங்களை அள்ளிச் செல்லும் தனியார் நிறுவனங்களிலும் அடிமைப் பணியாற்றுவதுதான் இவர்களது தேசியமா?

இட ஒதுக்கீடு என்பது நாட்டின் ஆட்சியில் பங்கு பெற அனைத்து மக்களுக்கும் உள்ள உரிமையை நிலைநாட்டுவதற்கான போராட்டமே யன்றி அதுவே அதன் இலக்கன்று. ஏனென்றால் அப் போராட்டம் வெற்றிபெறும் வரை ஒன்றிணையும். ஒடுக்கப்பட்ட மக்கள் வெற்றி பெற்றதும் அவ்வெற்றியே தோல்வியாகி ஒன்றிணைந்த மக்கள் பங்குச் சண்டைக்காகப் பிரிந்து சண்டை போட வைப்பது அதன் இயல்பு. அதை நாம் ஏற்கெனவே பார்த்துவிட்டோம். வெற்றி பெற்ற கையோடு வேலைவாய்ப்பென்பது அரசு வேலையன்று, உள்நாட்டுப் பொருளியல் வளர்ச்சியின் விளைவான பல்துறை வேலைவாய்ப்பு என்ற அடிப்படை யிலான முயற்சிகளை மேற்கொண்டிருந்தால் இன்றைய தேக்கமும் சிதைவும் ஏற்பட்டிரா.

இப்படிச் சொல்வதனால் இன்று தென்மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சண்டை இட ஒதுக்கீடு குறித்துத்தான் என்று நாங்கள் கருதுவதாகப் பொருளில்லை. ஒருபுறம் ஆட்சிக் கட்டி லேறத் துடிப்பவர்கள்; மறுபுறம் தங்கள் ஒதுக்கீட்டு நலன்களை வலுப்படுத்தத் துடிப்பவர்கள் ஆகியோரின் தலைமையில் தான் அவை நடைபெறுகின்றன என்று நாங்கள் கூறுகிறோம். இரண்டு வகையினரை யும் நாம் இங்குப் பார்க்கிறோம்.

இந்தச் சண்டைகளின் சாரமே மாந்த உரிமைகள் மறுப்புப் பற்றியது. காலங்காலமாக விலங்குகள் போல் சிறுமைப்படுத்தப்பட்ட மக்கள் விலங்கை ஒடித்து விடுபடுவதற்கான முற்போக்கான போராட்டம்தான் இது என்பதை நாங்கள் அறிவோம். இந்தப் போராட்டம் ஒருநாள் நடந்தேயாக வேண்டுமென்பதும் எங்கள் முடிவுதான். ஆனால் இம் மோதலை நிலையானதாக்கித் தங்கள் நலன்களை நிலைப்படுத்திக் கொள்ளத் திட்டமிடும் தலைமைகளைத் தான் நாங்கள் குறை கூறுகிறோம். இந்தப் பகை நிலையாகிப் போய்த் தமிழகத்தின் தேசிய வலிமை முற்றிலும் அழிந்துபோகக் கூடாது என்பதுதான் எங்கள் கவலை. அதனால்தான் போரிடும் இரு பிரிவினருக்கும் பொதுவான தேசியப் பொருளியல் நலன்களுக்கான போராட்டத்தை நோக்கி அவர்களின் கவனத்தை நாங்கள் ஈர்க்கிறோம்.

---

* *தென்மொழி அவையக் கருத்தரங்கில் (20.9.97) திரு. குமரிமைந்தன் அவர்கள் ஆற்றிய உரை - விரிவாக்கக் கட்டுரையின் மற்றொரு பகுதி*

## புத்தவச்சலம் நினைவுமண்டப எதிர்ப்புக் குழு ஓருநாள் முழுவதும் ஒலி முழக்கப் போராட்டம்.

மொழிப்போர் வீரர்களைக் கொன்று குவித்த மேனாள் முதலமைச்சர் பத்தவச்சலத்துக்கு இற்றைத் தமிழ்நாட்டரசு நினைவு மண்டபம் எழுப்புவதைக் கண்டித்துப் பல்வேறு தமிழ் இயக்கங்கள் பங்கேற்ற முழுநாள் தொடர் முழக்கப் போராட்டம் தி.பி. 2028 சிலை 14 காரி (27.12.97) அன்று சென்னை – சைதை கலைஞர் கருணாநிதி பொன்விழா வளைவு அருகில், பத்தவச்சலம் நினைவு மண்டப எதிர்ப்புக் குழுவின் அமைப்பாளரும் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளருமான பெ.மணியரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அன்று (27.12.97) காலை 10.30 மணியளவில் புலவர் இறைக் குருவனார் தொடக்கவுரையாற்றி முழக்கங்களை எழுப்பி அறப் போரைத் தொடங்கிவைத்தார். மொழிப்போர் வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தியும் பத்தவச்சலம் நினைவு மண்டபம் எழுப்பு வதைக் கண்டித்தும், அரசு அம்முயற்சியைக் கைவிடுவதோடு மொழிப்போர் ஈகியர்க்கு நினைவுச் சின்னங்கள் அமைக்குமாறு கோரியும், முழக்கங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டன.

புலவர் கி.த. பச்சையப்பன் (தமிழுரிமைக் கூட்டமைப்பு), சீராளன் (தமிழ் நாடு மார்க்கசிய இலெனினியக் கட்சி), நா. வைகறை (தமிழக இளைஞர் முன்னணி), வெற்றிச் செழியன் (பாவேந்தர் தமிழ் –அறிவியல் மன்றம்), பழனி மாணிக்கம் (த.தே.பொ.க.), வெற்றிச் செல்வன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), தாம்பரம் தமிழ்மணி (தமிழ்–தமிழர் இயக்கம்), ஓகநாதன் (தமிழக இளைஞர் முன்னணி), விசயேந்திரன் (தமிழக மாணவர் முன்னணி), பெரியார் (த. த. இ.), பாவலர் தமிழேந்தி (மார்க்கசிய–பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி), பேரா. முருகானந்தம் (ஆவடித் தமிழ்ப் பேரவை), மா. செ. தமிழ்மணி (உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்), பா.ச. பன்னீர்ச்செல்வம் (த. நா. மா. இலெ. க.), ந. அரணமுறுவல் (தமிழியக்கம்), சா. சந்திரேசன் (தலைநகர்த் தமிழ்க் கழகம்) தியாகு (த.த.இ.) ஆகியோர் உரையாற்றினர்.

பாவெல் குழுவினரின் (காஞ்சிக் கலையிலக்கியப் பேரவை) இசை நிகழ்ச்சி இடையிடையே இடம்பெற்றது. வள்ளுவன்– தமிழரசன் குழுவினர் (த. நா. மா. இலெ. க.) கொள்கைப் பாடல்கள் பாடினர்.

மாலை 5 மணிக்குத் தலைவர் நிறைவுரையாற்றினார். தொடர்ந்து அ. பதுமநாபன் (த. தே. பொ. க.) நன்றி நவின்றார். இந் நிகழ்ச்சியில் முந்நூற்றைம்பது பேர்க்குமேல் பங்கேற்றனர். ■



# மக்களவை

## கையெழுத்திடக் கற்பதே கல்வியா?

**ஆசிரியர் அவர்களுக்கு,**

சிலை (திசம்பர் 1997) இதழில் 'ஏன் இந்த ஏமாற்று வேலை?' என்ற தலைப்பின் கீழ் வெளியாகியுள்ள செய்திகள் இன்றைய நிலையில் அரசு, கல்விக்குத் தரும் 'சிறப்பின்' உண்மை நிலையை எடுத்துரைப்பனவாகவே அமைந்துள்ளன.

இன்று அரசுத் தொடக்கப் பள்ளிகளும், தமிழ்வழிக் கல்விப் பள்ளிகளும் (தாய்மொழிக் கல்வி) குழந்தைகள் கல்விகற்கப் பள்ளிகளுக்கு வரும் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சூழலில் அமைந்திருக்கின்றனவா என்பது வினாக்குறியே. ஏதோ தொடக்கப் பள்ளி இருக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்காக அரசு பள்ளிகளை அமைப்பதாகவே தெரிகிறது.

தமிழ்வழித் தொடக்கக் கல்விக் கூடங்களில் கட்டணமில்லாத் தரமான கல்வியைக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினால் எங்கே அனைவரும் கல்விகற்கத் தொடங்கி விடுவார்களோ என்று எண்ணியே 'கல்விபெறும் உரிமை 21-அ(3)'ல் குறிப்பிட்டுள்ளபடி "அரசால் நடத்தப்படாத கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறாத கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரை மேற்கண்ட பிரிவு2-இன் படியான கட்டணமில்லாக் கட்டாயக் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்டங்களை இயற்றக்கூடாது." என்பதன் மூலம் அரசு தனியார் ஆங்கிலவழிக் கல்வி நிறுவனங்களை மறைமுகமாக ஆதரிக்கிறதோ என ஐயுறத் தோன்றுகிறது.

இன்றைக்கு 'எழுத்தறிவு இயக்கம்', 'அறிவொளி இயக்கம்' என்ற பல்வேறு பெயர்களில் மக்களுக்கு ஏதோ எழுத்துக்கூட்டிப் படிக்கவும், கையெழுத்துப் போடவும் கற்றுத்தர வேண்டும் என்ற நோக்கம்தான் அரசுக்குப் பெரிதாக இருப்பதாகத் தெரிகிறது. 'முதியோர் கல்வி'ப் பணியில் காட்டும் அக்கறையையும், ஆர்வத்தையும் 'சிறுவர் கல்வி'க்குக் காட்டுவதாகத் தெரியவில்லை.

மக்களுக்குச் சிந்தித்துச் செயல்பட வேண்டியதைக் கற்றுத் தருவதாக அமையவேண்டிய கல்விமுறை, வெறும் கையெழுத்துப் போடக் கற்றுக்கொள்வது மட்டுமே கல்வியறிவு என்ற நிலையில் உள்ளது. அரசு கவனிக்குமா?

—**வேனில்,** சென்னை–45.

# செய்திகள்

## குழித்தலை தமிழ்க் கா. சு. இலக்கியக் குழு விழாவில் 'ஐயை' வில்லிசை நிகழ்ச்சி:

தி.பி. 2028, துலை 29, நளி 1 (15.11.97, 16.11.97) ஆகிய இருநாள்கள் குழித்தலை, அறிஞர் அண்ணா குமுகாய மன்றத்தில் பல்கலைக் குரிசில் கா. சுப்பிரமணியனாரின் 110-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவும், தமிழ்க் கா.சு. இலக்கியக் குழுவின் 33-ஆம் ஆண்டு விழாவும் இனிதே நிகழ்ந்தன.

பாட்டரங்கம், பட்டி மண்டபம், பாராட்டரங்கம், கருத்தரங்கம் மாணாக்கர்கட்குப் பரிசளிப்பு, சான்றோர் பெருமக்கட்குப் பாராட்டுப் பட்டயம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இரு நாள்களும் நடைபெற்றன.



விழாவின் முதல் நாள் (15.11.97) இரவு 8 மணி அளவில் நெல்லை அதியமான திரவியத்தம்மாள் குழுவினரின், பாவலரேறு ஐயா அவர்கள் படைத்த பாவியமாகிய 'ஐயை' வில்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. முனைவர் கடவூர் மணிமாறன் அவர்கள் ஐயை பாவியத்தின் கதையமைப்புக் குறித்தும் கதை மாந்தர்கள் பற்றியும் அறிமுக உரை ஆற்றினார்.

ஒருதலைக் காதலை உள்ளீடாகக் கொண்ட அவலப் பாவியம் 'ஐயை' வில்லிசை நிகழ்ச்சியின் பார்வையாளர்கள் அனைவரும் கண்ணீர் மல்க அதனைச் சுவைத்தனர். அனைவரின் நெஞ்சங்களையும் நெகிழச் செய்யும்வண்ணம் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி சிறப்புற அமைந்திருந்தது.

விழா ஏற்பாடுகளை இலக்கியக்குழு நிறுவனர் தமிழ்ச்சுடர், மீ.சு. இளமுருகு பொற்செல்வி அவர்களும், திருவாட்டி பொற்செல்வி இளமுருகு அவர்களும், முனைவர் கடவூர் மணிமாறன், பேராசிரியர் து. வெள்ளமுத்து ஆகிய பேராளர்களும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## இந்துமதி தங்கக்குபேரன் வாழ்க!

'தென்மொழி' அன்பரும், தமிழ்ப் புரவலருமான சென்னைத் திரு. சந்திரேசன்–மலர்க்கொடி இணையரின் மகள் செல்வி மருத்துவர் இந்துமதிக்கும், மஞ்சள் நீர்க்காயல் திரு. பால்பாண்டியன்–சரோசினி இணையரின் மகன் செல்வன் பொறிஞர் தங்கக்குபேரனுக்கும் தி.பி. 2028 நளி 12 வியாழன் (27.11.97) அன்று சென்னை – மயிலையில் முனைவர் சிவந்திஆதித்தன் அவர்கள் (தினத்தந்தி) தலைமையில் திருமணம் நடைபெற்றது. கல்வியமைச்சர் பேராசிரியர் அன்பழகனார் திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார். மணமக்கள் நீடினிது வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

## திருப்பூர்த் தமிழப்பன் தந்தையார் மறைவு

நீண்டநாள் தென்மொழி அன்பர் திருப்பூர்த் தமிழப்பன் அவர்களின் தந்தையார் திரு.ப. கணபதியப்பனார் அவர்கள், கடந்த நளி 14 காரி (29.11.97) அன்று, திருப்பூரை யடுத்த குறுக்கப் பாளை யத்தில் உள்ள தமது இல்லத்தில் இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகின்றோம். எண்பத்து நான்கு அகவை நிறைந்த திரு. கணபதியப்பனார்க்குத் திரு. தமிழப்பன் உள்ளிட்ட ஆண்மக்கள் நால்வர் உள்ளனர். குடும்பத்தினர்க்குத் தென்மொழியின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பல்லடம் மூர்த்தி மறைவு

தென்மொழியின் நெடுநாள் அன்பரும் பல்லடம் திருக்குறள் மன்ற உறுப்பினருமான திரு. ப. மூர்த்தி அவர்கள் கடந்த நளி 16 அன்று (1.12.'97) இரவு மாரடைப்பால் மறைவுற்றார் என்பதை அறிந்து வருந்துகின்றோம். பேரூராட்சி மன்ற உறுப்பினராகவும், நகர ம.தி.மு.க. செயலாளராகவும் இருந்து பொதுப் பணிகளில் ஈடுபட்டுவந்த திரு. மூர்த்தி அவர்கள் உதகை வெடிகுண்டு வழக் கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுக் காவல் துறையினரின் கொடுமை களுக்கு ஆளானவராவார். திரு. மூர்த்தியவர்களின் மறைவால் வாடும் அவர்தங் குடும்பத்தினர்க்கும் அன்பர்களுக்கும் தென்மொழி யின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# தமிழில் திருக்கோயில் வழிபாடு

(ஒரு கள ஆய்வு)

## [மக்கள் எழுச்சி மன்றத்தார் விளக்கம்]

'தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்யப் படும்; சமற்கிருதத்தில் செய்யுமாறு கேட்பவர்களுக்கு மட்டுமே அம் மொழியில் வழிபாடு செய்யப்படும்' எனும் அரசின் ஆணை செயல் படவும், இது தொடர்பாக மக்களிடையே நிலவும் அச்சத்தை அகற்றவும் மக்கள் எழுச்சி மன்றத்தின் சார்பில் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என முடிவு செய்தோம்.

முதற்கட்டமாகக் கடந்த சிலை 6 ஞாயிறு (21.12.'97) அன்று காலை 8 மணிக்குச் சென்னை - மயிலார்ப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு மன்ற உறுப்பினர்கள் பதினான்கு பேர் சென்றோம். அங்கே சிவக்கொழுந்து (கபாலீசுரர்) திருமுன்பில் வழிபாடு செய்யக் கோரினோம். அங்கிருந்த குருக்கள் சமற்கிருத மந்திரங்களை ஓதினார். அதை நிறுத்தக் கூறி "நாங்கள் கேட்காமல் நீங்கள் எப்படிச் சமற்கிருதத்தில் வழிபாடு செய்கிறீர்கள்?" என்றும், "அரசு ஆணையை மீறி நடப்பது குற்றமில்லையா?" என்றும் தொடர்ந்து குரலெழுப்பிய பிறகு அக்குருக்கள் வேண்டா விருப்பாகத் தமிழில் வழிபாடு செய்ய இசைந்தார். இசையினும் சிவக்கொழுந்தின் (சிவலிங்கத்தின்) திருமுன்பில் நின்றுகொண்டு "கார்த்திகேயா போற்றி!" என்று தவறாக 'மந்திரம்' ஓதினார்.

குருக்கள் தம்முடைய எரிச்சலைக் கட்டுப்படுத்திக்கொண்டு விருப்பமே இல்லாமல் வஞ்சகத்தனமாக வழிபாடு செய்ததை எங்களால் அறிந்துணர முடிந்தது. அவர்களுடைய செயல்முறை கடவுள் நம்பிக்கையைவிடச் சமற்கிருதத்தின்மீது அவர்கட்குள்ள கடும்பற்றையே வெளிப்படுத்தியது.

அதன்பிறகு, யாங்கள் கொண்டுசென்ற துண்டறிக்கையை அங்கிருந்த மக்களுக்குக் கொடுத்துத் தமிழில் வழிபாடு செய்வதன் சிறப்பையும், அதற்கான நம் உரிமையையும் விளக்கினோம். இக் களப்பணிக்குச் சென்ற எமது மன்ற உறுப்பினர்கள் பதினால்வரில் ஐவர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது.

துண்டறிக்கை கொடுக்கும் போது, "சமற்கிருதத்தில் வழிபாடு செய்தால் விளங்கவில்லையே; தமிழில் வழிபாடு செய்யும்படி

கேளுங்கள்" என்று பார்ப்பன அம்மையார் ஒருவரிடம் கூறினோம். உடனே அந்த அம்மையார் "நீங்கள் சமற்கிருதத்தைப் பயின்று வழிபாடு செய்யப் பழகுங்கள்" என்றார். அது எங்களுக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

மற்றொரு பார்ப்பன அம்மையாரிடம் துண்டறிக்கையைக் கொடுத்தவுடனே, அவர் சமற்கிருதத்தில் பாட்டுப் பாடிப் பிறகு தமிழில் விளக்கிச் சொன்னார். இதைக் கேட்ட நாங்கள் "தமிழில் சொன்ன பிறகே எங்களுக்குத் தெளிவாக விளங்குகிறது. நீங்கள் முன்பே தமிழில் சொல்லியிருக்கலாமே!" என்றவுடன் அந்த அம்மையார் மீண்டும் சமற்கிருதத்தில் உரக்கப் பாட்டுப் பாடி எங்களை மேலும் பேசவிடாமல் தடுத்தார். இதன் மூலம் யார் மொழிவெறி பிடித்தவர்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர முடிந்தது.

பார்ப்பனர்கள் சமற்கிருத மொழியின்மூலம் தங்களை நிலை நிறுத்தவதிலேயே குறியாக உள்ளனர். இதற்குக் கடவுளை—மக்களுக் கிருக்கும் நம்பிக்கையைக் கருவியாகப் பயன்படுத்தி வெற்றி கொள்கிறார்கள் என்பதை முதன்முறையாகப் பட்டறிவின் மூலம் உணர்ந்தோம். பார்ப்பனர்க்குக் கடவுள் என்பது ஒரு பொருட்டாகவே இல்லை. மதத்தைத் தம் ஆளுமை யாற்றலாகவே மதிக்கிறார்கள் என்பதை நாங்கள் மிகத் தெளிவாக நடைமுறையில் உணர்ந்தோம். அவர்கள் ஒரு குழுகமாகக் கூட அன்று; இயக்கமாகவே செயல் படுவதை அறிய முடிந்தது.


சற்றுநேரம் கழித்துப் பார்ப்பனர் இன்னொருவரிடம் துண்டறிக்கையைக் கொடுத்தோம். அதைப் பார்த்த அவர், "இந்தத் தமிழில் நாளைக்கு ஒரு எழுத்து மாறுபட்டு இருக்கிறது" என்று வீணான பேச்சின்மூலம் இழிவுசெய்தார். நாங்கள் சினத்தைக் கட்டுப் படுத்திக்கொண்டு அமைதியாகவும் முறையாகவும் மறுமொழி கூறி விடைபெற்றோம்.

இளைஞர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. அவர்கள் இதுவரை ஒருவகைத் தயக்கத்துடனும், உணர்வு இருந்தும் எப்படி வெளிப்படுத்துவது என்று அறியாதவர்களாகவும் இருந்தார்கள் என்பதை அவர்களுடைய உணர்ச்சி மயமான பேச்சின்மூலம் அறியமுடிந்தது.

பிறகு வடபழனிக் கோயிலுக்குச் சென்றோம். அங்கும் சமற்கிருதத்திலேயே வழிபாடு செய்தார்கள். இதைக் கேட்ட நாங்கள் உரத்த குரலெழுப்பி அதை நிறுத்தச் செய்தோம். உரசல்களுக்குப் பிறகு தமிழில் வழிபாடு செய்தனர். இவ்வாறு தமிழில் வழிபாடு

செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது மற்றொரு குருக்கள் சமற்கிருதச் சொற்களைப் பெருங்குரலெடுத்துப் பலுக்கி (உச்சரித்து) வழிபாடு செய்தார். தமிழ் வழிபாட்டு மந்திரங்க்ளைச் சரிவரக் கேட்க முடியாதபடி செய்தார். அவரை நிறுத்தச் சொன்ன போது "இது மற்றொருவர் கேட்டுச் செய்யப்படுவது" என்று மறுமொழி கூறினார். அவர் பெருங்குரல் பாய்ச்சி ஒப்பித்தது பற்றி அவருடன் நாங்கள் அழுத்தமாகக் கேட்ட போது அங்கிருந்த குருக்கள்மார் ஐந்தாறுபேர் வந்து அமைதிப்படுத்தினர்.

இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது பார்ப்பனர் ஒருவர் சமற்கிருதத்தில் வழிபாடு செய்யும்படி கேட்டார். "வழிபட வரும் மக்கள் சமற்கிருதத்திலேதான் செய்யச் சொல்கிறார்கள். அதற்கு நாங்கள் என்ன செய்வது?" என்றார் மேற்படி குருக்கள். அங்கிருந்த குருக்கள்மார் சிலர், "நாங்களும் தமிழர்கள்தாம்; எங்களுக்கும் தமிழுணர்வு இருக்கிறது; இதுவரை சமற்கிருதத்தில் பழகியதால் சில சிக்கல்கள் எங்களுக்கு உள்ளன. இன்னும் ஓராண்டுக்குள் தமிழ் மந்திரங்களைச் சரியாகப் பயின்று தமிழ்வழிபாடு சிறப்புறத் துணை புரிவோம்" என்று கூறினர். பிறகு அங்கும் துண்டறிக்கை கொடுத்து வந்தோம். ●



# தமிழ்வழிபாட்டை வலியுறுத்திச் சென்னையில் மக்கள் தொடரி!

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்துமாறு தி.பி. 2028 சிலை 17 வியாழன் (1.1.98) அன்று, சென்னை–மயிலார்ப்பூரில் மக்கள் தொடரி(மனிதசங்கிலி)ப் போராட்டம் நடைபெற்றது.

அன்று (1.1.98) காலை 9.30 மணிக்கு, மயிலைத் திருக்குளத்தின் மேற்குக் கரையில் தொடங்கி வடகரை வழியாகக் கீழைக் கோபுர வாயில் பதினாறுகால் மண்டபம் வரை நடைபெற்ற இம்மக்கள் தொடரி காலை 11.30 மணியளவில் நிறைவுற்றது.

சென்னை மக்கள் எழுச்சி மன்றத்தின் சார்பில் நடைபெற்ற இம் மக்கள் தொடரியில் சித்தாலப்பாக்கம், களக்காடு கிளைமன்றங் களைச் சார்ந்தோரும், தென்மொழி அவையம், திருவான்மியூர்த் திருவள்ளுவர் மழலையர் பள்ளி, திருவள்ளுவர் இரவுப் பாடசாலை, பெரியார் இரவுப் பாடசாலை, இளைஞர் பசுமை இயக்கம், நந்தவனம் இளைஞர் இயக்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், புரட்சிகர இளைஞர் முன்னணி முதலான அமைப்புகளைச் சார்ந்தோரும் பிறருமான ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக ஐந்நூறுபேர் பங்கேற்றனர். கோரிக்கைகள் எழுதிய அட்டைகள் தாங்கியும் முழக்கங்கள் எழுப்பி யும் நின்றனர். துண்டறிக்கைகள் கொடுத்துப் பொதுமக்களிடையே தமிழ் வழிபாட்டின் இன்றியமையாமை விளக்கப்பட்டது.

கீழைக் கோபுர வாயிலில் திருக்குறள்மணி இறைக்குருவனார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் மா. பூங்குன்றன், சடகோபன், கிருட்டிணமூர்த்தி, குன்றத்தூர் வெற்றிச் செழியன், வெற்றிச் செல்வன், சேகர், சுந்தரமூர்த்தி, செஞ்சூரியன் ஆகியோர் தமிழ்வழிபாடு பற்றி விளக்கிப் பேசினர். தலைவர் நிறைவுரைக்குப் பின் மக்கள் எழுச்சி மன்ற உறுப்பினர் நன்றி நவின்றார்.

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு நடத்துமாறு வலியுறுத்திப் பொதுமக்கள் தெருவில் நின்று போராடுவது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இதுதான் முதன்முறை யென்று கோடிட்டுக் காட்டியதோடு, இதைத் தொடக்கமாகக் கொண்டு தமிழகமெங்கும் இப்போராட்டம் பரவவேண்டும் என்றும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார். ❑

# நமக்கு வந்த மடல்கள்

***0:1642*** பேரன்பிற்குரிய ஐயா,

'தென்மொழி' பெற்றேன். தமிழர் நலத் தொண்டை இடையறாது ஆற்றும் தங்கட்கும் தோழர்களுக்கும் எனது உளம் நிறைந்த பாராட்டுகள்!

— கு.வெ.கி. ஆசான், கோவை.

***0:1643*** ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம். வேடசந்தூரில் தமிழ்ப் பேரவை என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளோம். தொடர்ந்து பல மாதங்களாகச் செயல்பட்டும் வருகிறோம். தமிழின முன்னேற்றத்துக்கும், மொழி வளர்ச்சிக்கும் தங்கள் இதழ் அரும்பாடு பட்டு வருவது நாங்கள் அறிந்ததே. எங்கள் பகுதியிலும் 'தென்மொழி' வர வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

— கி. இரவிச்சந்திரன், வேடசந்தூர்.

***0:1644*** ஐயா, வணக்கம்!

தமிழ் இதழ்களில் 'தென்மொழி' தூய தமிழில் வெளிவருவதோடு, தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பங்காற்றி வருகிறது. தாய் மொழியாகிய தமிழை, அதன் சிறப்பை அறிவதில் ஆர்வமுள்ள எனக்குத் தங்கள் இதழ் பயனுடையதாக இருக்கிறது.

—அர. சோதிமணி, திருப்பூர்.

***0:1645*** ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

நான் ஒரு மலேசியா வாழ் தமிழன். நான் முதல்முறையாக ஒரு தூய தமிழ் அல்லது தனித்தமிழ்ப் புத்தகம் படித்தேன் என்றால் அது 'தென்மொழி'தான். நான் இங்குக் குறிப்பிடுவது மாத இதழ்கள் அல்ல (மாத இதழ்களை நான் பார்த்ததில்லை) நான் குறிப்பிடுவது பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலரைத்தான். அதாவது, சுவடி-29, ஓலை-6, தி.பி. 2028 ஆடவை (1997 சூன்). இந்த மலரைப் படித்துவிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

— மு. செல்வம், ஈப்போ, மலேசியா.

***0:1646*** ஐயா, வணக்கம்.

மொழி முதன்மையாளர்களின் வெற்று முழக்கமாகவன்றிச் சிறந்த ஆய்வுக்கட்டுரைகளையும், ஈழத்துப் போரின் களச்செய்திகளையும் தாங்கி இனிய இலக்கிய, ஆய்வுப் பெட்டகமாகத் 'தென்மொழி' இருப்பதை உணர முடிகிறது. இன்றுவரை இது போன்ற இதழ்களைப் படிக்க இயலாமல் போனதற்காக வருந்துகிறேன்.

— தீபன், ஆர்க்காடு.